Registered as a Newspaper பக்கங்கள்: 8 விலை ரூபா 5·00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

**வீதியோர மரங்களைப் பாதுகாக்க மக்களை ஒத்துழைக்கக் கோரிக்கை**

சூழலைப் பாதுகாக்கும் நோக்குடன் வீதியோரங்களில் நாட்டப்படும் மரக் கன்றுகளை பாதுகாத்துப் பராமரிக்க ஒத்துழைப்புத் தருமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் பொது மக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளனர். இன்று யாழ். மாவட்டத்தில் பெருமளவு மரங்கள் விறகுக்காக தறிக்கப்படுவதனால் குடாநாட்டில் சூழல் பாதிப்படையும் நிலை தோன்றியுள்ளது. இதனைக் கருத்திற்கொண்டு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் வீதியோர (6 ஆம் பக்கம் பார்க்க)

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆவணி 28 13-09-94 செவ்வாய்க்கிழமை ஓசை 207

## இனப்பிரச்சினை குறித்த ஆரம்பகட்ட பேச்சுவார்த்தை

# புலிகளின் தரப்பில் பிரதிநிதிகள் நியமனம்; தலைவர் பிரபாகரன் சந்திரிகாவிற்கு கடிதம்

## யுத்த நிறுத்தம் பற்றி குறிப்பிடாமை குறித்து கவலை

(யாழ்ப்பாணம்)

**சிறிலங்கா அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கு இணங்க ஆரம்ப பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் தமது தரப்பு பிரதிநிதிகளை நியமித்துள்ளார். இதுகுறித்து சிறிலங்கா பிரதம மந்திரி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவிற்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில் மின்சார விநியோகத்தை மீள அமைக்கவும், பெருஞ்சாலைகளைத் திருத்தவும், நீர்ப்பாசனத் திட்டங்களைச் சீரமைக்கவும அரசாங்கம் முடிவு செய்திருப்பதை வரவேற்றுள்ளதுடன், யுத்தநிறுத்தம் குறித்து அரசாங்கம் எதுவுமே குறிப்பிடாததையிட்டு கவலை தெரிவித்தும் உள்ளார்.**

சிறிலங்கா பிரதமர் சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவிற்கு தலைவர் பிரபாகரன் எழுதிய கடிதத்தை முழுமையாக இங்கே தருகின்றோம்.

அன்புள்ள பிரதம மந்திரி அவர்களுக்கு,

9, செப்டெம்பர் 1994, திகதியிடப்பட்ட உங்களது கடிதம் கிடைக்கப்பெற்று மகிழ்ச்சி. எமது காவலிலிருந்த 10 காவற்துறைக் கைதிகளை நாம் விடுதலை செய்தமை எமது நல்லெண்ணத்தைக் காட்டுவதாக நீங்கள் வரவேற்றுள்ளீர்கள். அதையிட்டு மகிழ்வடைகிறோம்.

பொருளாதார தடைநீக்கம் செய்யப்பட்ட பொருட்கள் யாழ்ப்பாண மக்களுக்கு உடனடியாகக் கிடைக்க வேண்டுமென நீங்கள் விரும்புவதை நாம் வரவேற்கிறோம். இந்த விடயத்தில் நாமும் அதே அக்கறையுடையவர்களாகவே இருக்கிறோம். மிகவும் அவசரமான இந்தப் பிரச்சினைக்கு தீர்வு

மின்சார விநியோகத்தை மீள அமைக்கவும், பெருஞ்சாலைகளைத் திருத்தவும், நீர்ப்பாசனத் திட்டங்களைச் சீரமைக்கவும் உங்களது அரசாங்கம் முடிவு செய்திருப்பதை நாம் வரவேற்கிறோம். இந்த சீரமைப்பு வேலைகளில் ஈடுபடப்போகும் அரசாங்க தொழில்நுட்ப அதிகாரிகளுக்கு எமது இயக்கம் சகல ஒத்துழைப்புகளையும் வழங்குமென உறுதி கூறுகிறோம்.

சமாதான பேச்சுகளுக்கு நாம் விடுத்த வேண்டுகோளுக்கு சாதகமான முறையில் நீங்கள் பதிலளித்திருப்பதை நாம் வரவேற்கிறோம். ஆரம்ப பேச்சுவார்த்தைகளைத் தொடங்குவதற்கு பிரதிநிதிகளை நியமிக்குமாறு கேட்டிருந்தீர்கள். பூர்வாங்க பேச்சுக்களை நடத்துவதற்கு கீழ்க்காணும் அதிகாரபூர்வமான பிரதிநிதிகளை நாம் நியமித்திருக்கிறோம். நீங்கள் குறிப்பிட்டுள்ள அபிவிருத்தித் திட்டங்களின் சீரமைப்பு



## பி.பி.சியில்இன்று தலைவரின்பேட்டி

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் தலைவர் வே. பிரபாகரன் அவர்களை லண்டன் பி. பி சியின் தமிழ்ச் சேவையைச் சேர்ந்த திருமதி ஆனந்தி சூரியப்பிரகாசம் சந்தித்துள்ளார்.

இச்சந்திப்பின்போதான விபரங்கள் பி. பி. சியில் இன்று ஒலிபரப்பாகும் எனவும் தெரியவருகின்றது.

கடந்த ஒரு வாரகாலமாக திருமதி ஆனந்தி சூரியப்பிரகாசம் யாழ். நிலைவரங்களை நேரில் அவதானிக்க இங்கு தங்கியிருந்தார்.

## ஐ. தே. க. வழங்கிய சம்பள உயர்வு புதிய அரசினால் மீளப்பெறப்பட்டது

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய தேசியக் கட்சி அர

ற்கு அனுப்பி வைத்துள்ளார்.

இது தொடர்பாக மேலதிக

அனுப்பிவைக்கவில்லை என செயலக வட்டாரங்கள் தெரி

யின் நீங்கள் விரும்புவதை நாம் வரவேற்கிறோம். இந்த விடயத்தில் நாமும் அதே அக்கறையுடையவர்களாகவே இருக்கிறோம். மிகவும் அவசரமான இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண விளையும் உங்களது முயற்சிகளுக்கு நாம் ஒத்துழைப்பு வழங்குவோம்.

வாங்க பேச்சுக்களை நடத்துவதற்கு கீழ்க்காணும் அதிகார பூர்வமான பிரதிநிதிகளை நாம் நியமித்திருக்கிறோம். நீங்கள் குறிப்பிட்டுள்ள அபிவிருத்தித் திட்டங்களின் சீரமைப்பு வேலைகள் குறித்தும் இவர்கள் உங்களது பிரதிநிதிகளுடன் பேசுவார்கள்.

(6ஆம் பக்கம் பார்க்க)

# பிரதிநிதிகளை தெரிவு செய்யின் ஆரம்ப பேச்சுக்களை நடத்தலாம்

## தலைவர் பிரபாகரனுக்கு பிரதமர் சந்திரிகா கடிதம்



[கொழும்பு]

சமாதானப் பேச்சு வார்த்தைகளுக்கு தயாராக இருப்பதாக நீங்கள் விடுத்த அறிக்கையை நாம் மிகவும் ஆர்வத்துடன் நோக்கினோம். இதுபற்றி நாம் விபரமாக உங்களுடன் பேச விரும்புகிறோம்.

எனது பிரதிநிதிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு நீங்களும் உங்களது பிரதிநிதிகளை நியமிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு சிறிலங்காவின் பிரதமமந்திரி சந்திரிகா குமாரதுங்க தலைவர் பிரபாகரனுக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

தலைவர் பிரபாகரனுக்கு அவர் எழுதியுள்ள கடிதம் வருமாறு;

அன்பின் பிரபாகரன் அவர்களுக்கு,

யாழ்ப்பாணம் மற்றும் வடபகுதி மக்கள் மீது முன்னைய அரசு திணித்திருந்த பொருளாதாரத் தடையை நாம் நீக்கியுள்ளமை எமது நல்லெண்ணத்தை காட்டுவதாக நீங்கள் வரவேற்றிருக்கிறீர்கள் இதையிட்டு நாம் மகிழ்ச்சி அடைகிறோம். அத்தோடு பல ஆண்டுகளாக விடுதலைப் புலிகளின் தடுப்புக் காவலிலிருந்த 10 காவல் துறையினரை விடுதலை செய்வதற்கு நீங்கள் முடிவெடுத்ததை நாம் பெரிதும் வரவேற்கின்றோம். இது உங்களின்ஒரு நல்லெண்ண நடவடிக்கையாக மட்டுமன்றி வடக்கு - கிழக்கு பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணும் உங்களது ஆக்கபூர்வமான நோக்கிற்கு ஒரு எடுத்துக் காட்டாகவும் அமைவதாக நாம் கருதுகிறோம்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்குதயா

(6ஆம் பக்கம் பார்க்க)

# யாழ் போதனா வைத்தியசாலை கட்டட வேலை ஆரம்பிக்க முயற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனா வைத்திய சாலையில் கட்டப்பட்டு அரைகுறையாயுள்ள கட்டடத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கு சுமார் பன்னிரண்டு மில்லியன் ரூபா தேவைப்படுவதாகவும் இது கிடைத்ததும் உடனடியான வேலைகளை தாம் ஆரம்பிக்கப்போவதாக யாழ் போதனா வைத்திய சாலை நிர்வாக உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

யாழ் அரசாங்க அதிபர் மற்றும் வேறு பலரின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட மேற்படி திட்டத்திற்கு அமைய ஐந்து மாடிகளைக் கொண்ட ஐநூறு படுக்கை வசதி கொண்ட இக்கட்டடம் கட்டப்பட்டதாகவும் எனினும் பின்னர் நாட்டில் நிலவிவந்த அசாதாரண சூழ்நிலையை மையமாககொண்டு இது இடை நிறுத்தப்பட்டதாக சுட்டிக்காட்டினார்.

தற்போது பாவனையில் உள்ள வைத்தியசாலை கட்டடம் மிகவும் பழமை வாய்ந்ததாக காணப்படுவதாகவும் எனவே இவற்றில் திருத்தத்தை மேற்கொள்ள வேண்டியிருப்பதாலும் தற்போது புதிய கட்டடத்தை மீள கட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாக புதிய சுகாதார அமைச்சுக்கு மிக விரைவில் மகஜர் ஒன்றை தயாரித்து வழங்க இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்

(6ஆம் பக்கம் பார்க்க)

## செய்தியாளர் வருகை

வெளிநாட்டுச் செய்தி நிறுவனங்களைச் சேர்ந்த பல செய்தியாளர்கள் யாழ்.நிலை

(6ஆம் பக்கம் பார்க்க)

## இன்று படகுச் சேவை

கிளாலி-பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய தேசியக் கட்சி அரசினால் அமுலுக்குக் கொண்டு வரப்பட்ட அரச ஊழியர்களின் சம்பள உயர்வு தொடர்பான சுற்றறிக்கையினை புதிய அரசு மீளப் பெற்றுள்ளதாக தெரியவருகின்றது.

நேற்று மாலை கொழும்பில் இருந்து இத்தகவலை யாழ். அரச அதிபர் கா. மாணிக்கவாசகர் யாழ். செயலகத்திற்கு அனுப்பி வைத்துள்ளார்.

இது தொடர்பாக மேலதிக விபரங்கள் எதனையும் அவர் அனுப்பிவைக்கவில்லை என செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (பா),(சி)

## சிறுபான்மை இனத்துடன் ஆலோசித்தே திருத்தம்

(கொழும்பு)

அரசியல் அமைப்பில் சீர்திருத்தம் கொண்டுவருவது தொடர்பாக சிறுபான்மை இனங்களுடன் கலந்தாலோசிக்கப்படும் என்று நீதி அமைச்சரும் வெளிநாட்டு வர்த்தகம் மற்றும் அரசியலமைப்பு விவகாரங்களுக்கான அமைச்சருமான பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் கூறியுள்ளார்.

அரசியலமைப்பு சீர்திருத்தம் தொடர்பாக உயர்மட்ட அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திய அவர் மேலும் கூறுகையில், அரசியலமைப்பு சீர்திருத்தம் தொடர்பான மசோதா ஒன்று விரைவில் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்வது தமது முக்கிய நோக்கம் எனவும் அரசியல

(6ஆம் பக்கம் பார்க்க)

## எறிகணையை சோதித்த சிறுவன் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

வளவினுள் கிடந்த எறிகணையை எடுத்து குத்திய போது அது வெடித்ததில் பளையைச் சேர்ந்த சிறுவன் ஒருவர் படுகாயமடைந்தார்.

மேற்படி சம்பவத்தின் போது அரசன் குடியேற்றத் திட்டம் பளையை சேர்ந்த றொபேட் (வயது 14) என்ற சிறுவனே படுகாயமடைந்தவர் ஆவார்.

இச்சம்பவம் பற்றி தெரியவருகையில், வளவினுள் அநாதரவாக கிடந்த மேற்படி எறிகணையை எடுத்த சிறுவன் அதனை பரீட்சித்து பார்ப்பதற்காக நிலத்தில் குத்தியபோது அது வெடித்து சித

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதித் தேர்தலில் காமினி போட்டியிட்டால் ஒஸி தனித்து போட்டி

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக காமினி திசாநாயக்கா போட்டியிட்டால் அதனுடன் கூட்டுச் சேர்ந்துள்ள மக்கள் கட்சித் தலைவர் ஒஸி அபேகுணசேகர அக்கூட்டை மீறித் தானும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட உத்தேசித்து இருப்பதாக அக்கட்சி வட்டாரங்களில் இருந்து தெரியவந்துள்ளது.

நடைபெற்ற பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து மக்கள் கட்சி போட்டியிட்டமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை காமினி திசாநாயக்காவின் வருகையைத் தொடர்ந்து அதிருப்தி அடைந்துள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் சில உறுப்பினர்கள் ஒஸி அபேகுணசேகரவுடன்இணைந்து செயற்படலாம் என அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

## எறிகணை வீச்சு

(தொல்புரம்)

காரைநகரில் நிலைகொண்டுள்ளசிறிலங்கா ஆயுதப்படையினர் தமது காவல் நிலைகளிலிருந்து நேற்று முன்தினம் நள்ளிரவு 11.50 மணியளவில் மூளாய், பொன்னாலைப் பகுதிகளை நோக்கி பலத்த எறிகணை வீச்சினை மேற்கொண்டனர். இவ் எறிகணைகள் மேற்படி பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன. இச்சம்பவத்தில் உயிர்ச்சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை எனத் தெரியவருகிறது. (41)

## திருமலை மாவட்டத்தில் 3 நாள் ராணுவ நடவடிக்கை

சிறிலங்கா இராணுவத்தினர் திருகோணமலை மாவட்டத்தின் கும்புறுப்பிட்டிய பகுதியில் மூன்றுநாள் இராணுவ நடவடிக்கையொன்றை அண்மையில் மேற்கொண்டனர். இம் மாவட்டத்தின் புடவைக்கட்டு பகுதியிலும், மணலாறு மாவட்டத்திலும் கூட இராணுவ நடவடிக்கைகள் அண்மையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று சிறிலங்காவின் பாதுகாப்பு வட்டாரங்கள் கூறியுள்ளன.

## வரி விளம்பரம்

### ஆனந்தம் தயாரிப்புகள்

சத்-சித் ஆனந்தம்- சத்தாக இருக்கும் உண்மைப் பொருளை எமது சித்தத்தால் நிந்தால் கிடைப்பது எமக்கு பேரானந்தம். அதே போல ஆனந்தம் சீயாக்காய் பவுடர், ஆனந்தம் அம்மாமி அப்பளம். பாவித்தால் ஆனந்தம் அடைவீர்கள். கேட்டு வாங்குங்கள் ஆனந்தம். (சி-10289)

### விற்பனைக்கு

OLYMPIA தமிழ் பழைய கீபோட் தட்டச்சு இயந்திரம் விற்பனைக்கு உண்டு. தொடர்பு R. மருதலிங்கம் 8/1 அம்மன் வீதி சுந்தர்மடம், யாழ்ப்பாணம். (9380)

### தமிழ் சுருக்கெழுத் தாளர் பயிற்சி

பாடசாலையை விட்டு விலகியவர்களுக்கான தமிழ் சுருக்கெழுத்து - தட்டச்சு பயிற்சி ஆரம்பிக்கப் படவுள்ளது. 23-9-94 ற்கு முன் நேரில் தொடர்பு கொள்ளவும். வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம், வதிரி; கரவெட்டி. (9387)

### முன் கூட்டியே பதிவு செய்யுங்கள்

தரத்தில் உயர்ந்த நல்லின பிறிமா புறோயிலர்களை பெற்றுக் கொள்வதற்கு முன் கூட்டியே பதிவு செய்யுங்கள். தொடர்பு:- மேஜர் பிரதாப் செட்டிபண்ணை, இராஜவீதி, கோப்பாய், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், (சி-10329)

**UNIVERSITY OF JAFFNA SRI LANKA**

**FACULTY OF MEDICINE**

**COMMENCEMENT OF THE ACADEMIC YEAR 1994 - 95**

The Academic Year 1994/95 will commence on Monday, 3rd October 1994 to all Medical Students including new admissions.

**REGISTRAR**
(சி-10326)

# உரிமை கோரா சடலங்கள் புதைக்க இடம் ஒதுக்குக

## யாழ் வைத்தியசாலை கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

உரிமை கோரப்படாத சடலங்களை புதைப்பதற்கு இடம் ஒதுக்கித் தருமாறு யாழ். போதனா வைத்தியசாலை யாழ். மாநகர சபையை கோருகிறது.

யாழ். போதனா வைத்தியசாலையில் மரணமடைந்து உரிமை கோரப்படாதிருக்கும் சடலங்களில் சிலவற்றை யாழ் பல்கலைக்கழகம் பொறுப்பேற்று வருகிறது இவற்றுள் மேலதிகமான சடலங்களை வைத்தியசாலை நிர்வாகமே அடக்கம் செய்து வருகின்றது.

இவற்றை அடக்கம் செய்வது தற்பொழுது காக்கைதீவுப் பகுதியில் நடைபெற்றுவருகிறது. இங்கே போதிய இடம் இல்லாததால் வைத்தியசாலை நிர்வாகம் பெரும் சிரமத்தை எதிர்நோக்கியுள்ளது.

உரிமை கோரப்படாத சடலங்களை அடக்கம்செய்வதற்கு தற்பொழுது உள்ள இடம் போதாததால் அருகில் உள்ள காணியை பாவிப்பதற்கு அப்பகுதியில் உள்ள சமய நிறுவனம் ஒன்று எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. அத்துடன் அடுத்த காணி மானிப்பாய் நகர சபைக்குச் சொந்தமானது இனால் அக்காணியை பாவிக்க முடியாத சூழ்நிலை யாழ் வைத்தியசாலை நிர்வாகத்திற்கு ஏற்பட்டுள்ளது இதை நிவர்த்திக்கும் முகமாகவே வைத்தியசாலை நிர்வாகம் யாழ். மாநகர சபையிடம் உரிமை கோரப்படாத சடலங்களை அடக்கம்செய்வதற்கு காணி தந்துதவுமாறு கேட்டுள்ளது. (88) (நி)

# மாணவர் கல்விக்கு வெளிச்சவசதி அளிப்பு

அரியாலை டயஸ் குடியிருப்பில் வசிக்கும் தீவக மாணவ மாணவியர் இரவில் 'பெற்றோமக்ஸ்' வெளிச்ச வசதியுடன் கல்வி கற்று வருகின்றனர். தினமும் மாலை 6.00 மணி தொடக்கம் இரவு 10.00 மணி வரை நடைபெறும் இக் கல்வி கற்றலில் சுமார் நாற்பது மாணவர்கள் வரை பங்கு பற்றுவதாகவும், இதற்கென இரண்டு பெற்றோமக்ஸ் உபயோகிக்கப் படுவதாகவும், இவற்றிற்கான மண்ணெய் விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் தீவகக் கோட்டத்தினரால் வாரந்தோறும் வழங்கப்படுவதாகவும் குடியிருப்பு நிர்வாக வட்டாரங்ள் தெரிவித்தன. (22)

## திருவிழா

சண்டிலிப்பாய் புனித திரேசம்மாள் ஆலய திருநாள் வழிபாடுகள் 20ஆம் திகதி முதல் ஐந்து நாட்கள் நடைபெறும். திருநாள் திருப்பலி 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று பங்குக்குரவர் அருட் திரு ஏ. எவ். பெனட் அடிகளால் ஒப்புக் கொடுக்கப்படும்

# தலதா மாளிகை யானை புற்றுநோயால் மரணம்

(கொழும்பு)

முன்னாள் இந்தியப் பிரதமர் இந்திராகாந்தியினால் கண்டி தலதா மாளிகைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட ஜெயராஜா என்ற யானை 45 ஆவது வயதில் இறந்துவிட்டது. கடந்த ஒன்றரை வருடமாக இந்த யானை புற்றுநோயால் பாதிப்புற்று இருந்தது.

கடந்த சில வருடங்களாக இது கண்டி எசலபெரஹரவில் பங்குபற்றி வந்தது.

கடந்த புதனன்று தலதா மாளிகையின் தியவதனநிலமே ரஞ்சன்விஜேரட்ணவின் உத்தியோகபூர்வ இல்லம் அமைந்திருந்தவளவில் அன்று காலை கீழே வீழ்ந்துவிட்ட யானையை காப்பாற்ற பேராதனை பல்கலைக்கழக மிருகவைத்தியர்கள் முயற்சித்த போதும் அது பலனளிக்கவில்லை யானையின் சடலம் தியவதன நிலமேயின் இல்லம் அமைந்துள்ள வளவில் அடக்கம் செய்யப்பட்டது.

## கண்ணீர் அஞ்சலி

குரும்பசிட்டி மண்ணில் வாழ்ந்து
தன் கைவண்ணத்தால் தமிழ் மண்ணிற்கு
புகழ் சேர்த்த கலைஞன்!

# மருத்துவ நூல் வெளியீட்டு விழா

## சில நோய்களும் ஆலோசனைகளும்

டாக்டர். எஸ். பி ஆர். சிமாறன்

**இடம்:** கைலாசபதி கலையரங்கு, யாழ். பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்
**காலம்:** 14-09-1994 புதன்கிழமை
**நேரம்:** மாலை 3.00 மணி

| | |
|---|---|
| தலைமை : | பேராசிரியர் எஸ். வி. பரமேஸ்வரன் |
| வெளியிடுபவர் : | பேராசிரியர் க. குணரட்ணம்<br>துணைவேந்தர் யாழ். பல்கலைக்கழகம் |
| முதற்பிரதி பெறுநர் : | திரு. சு. ப. தமிழ்ச்செல்வன்<br>பொறுப்பாளர், தமிழீழ அரசியல்துறை |
| ஆசியுரை : | ஸ்ரீல ஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய ஸ்வாமிகள்<br>நல்லை ஆதீனம், நல்லூர். |

வெளியீட்டுரை :

| | |
|---|---|
| திரு இ. முருகையன் | பேராசிரியர் அ. சண்முகதாஸ் |
| டாக்டர் க. சிவபாலன் | பேராசிரியர் பொ. பாலசுந்தரப்பிள்ளை |
| திரு சுந்தரம் டிவகலாலா | திரு. வே. இளங்குமரன் |
| கலாநிதி க. குணராசா | சத்திரசிகிச்சை நிபுணர், |
| டாக்டர் எம். முருகானந்தன் | டாக்டர் எம். கணேசரட்ணம் |

## நினைவு கூருகின்றோம்...

**13-09-1994**

1988ஆம் ஆண்டு இதேதினத்தில் மட்டு - ஆரையம்பதியில் தேசவிரோதிகளுடனான சமரில் விழுப்புண்ணடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**றியாஸ்-அருணா** (தியாகராசா சதீஸ்வரன் - ஆரையம்பதி 3 - மட்டு)

மணலாறு - நெடுங்கேணி, சன்னாசிப்பரந்தன் பகுதியில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**2-ம் லெப் ராதா** (சிவகுரு தங்கவேல் - சன்னாசிப்பரந்தன், நெடுங்கேணி - மணலாறு)

வல்வெட்டித்துறையில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**லெப். குகன்** (இளஞ்சிங்கம் இளஞ்செழியன் - கரவெட்டி கிழக்கு - யாழ்)

1989ஆம் ஆண்டு திருமலை - மூதூர், கட்டைபறிச்சான், இறால்பாலம் பகுதியில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**லெப். சுருளி** (முத்துக்குமார் பாலசிங்கம் - மூதூர் - திருமலை)

**லெப். ரூபன்** (இ. திருச்செல்வம் திருமலை)

கொழும்பில் இரகசியப் பொலிசாரினால் கைது செய்யப்பட்டுக் கொலை செய்யப்பட்டு எமைப்பிரிந்த,

**2-ம் லெப். பவான்** (இராசையா சரவணபவான்- கோட்டைக் ல்லாறு - மட்டு)

இதேபகுதியில் விபுலானந்த மகாவித்தியாலயக் கட்டிடத்தினுள் வைத்து இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டு எமைப் பிரிந்த -

★ **காளி** (பிள்ளையான் காளிராசா - மூதூர் - திருமலை)

1990-ம் ஆண்டு தம்பலவத்தையில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப் பிரிந்த,

**லெப். றொபின்** ( — — ஐயங்கேணி, ஏறாவூர் - மட்டு)

யாழ் கோட்டையில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**கப்டன் அஞ்சனா** (கோணேஸ்வரி பொன்னம்பலம் - 798, அன்சார் வீதி. கிளிநொச்சி)

இதே பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய -

**நிவாஸ்** (சின்னத்தம்பி இராமச்சந்திரன் - வீராடு சேனை - மட்டு)

**சுரேன்** (சின்னத்துரை சுதாகர் - தம்பலகாமம் - திருமலை)

**றெஜினோல்ட்** (விநாசித்தம்பி வினோகரன் - முள்ளியவளை - திருமலை)

**கப்டன் ஆனந்தபாபு** (ஆறுமுகம் ஜெகதீஸ்வரன்- பூவரசங்குளம் - வவுனியா)

**றொபின்** (பேரின்பராசா கணேஸ் - பன்னங்கண்டி, பரந்தன் - கிளிநொச்சி)

**லெப். நெப்போலியன்** (சங்கரசிவம் விக்னேஸ்வரன் - தாவடி தெற்கு, கொக்குவில் - யாழ்)

**சந்திரபாபு** (யோகசிகாமணி ராகவன் - சட்டநாதர் வீதி, நல்லூர் - யாழ்)

**தமிழ்ச்செல்வன்** (நடராசா நந்தரூபன் - வண்ணாங்கேணி - பளை)

## கண்ணீர் அஞ்சலி

குருப்பசிட்டி மண்ணில் வாழ்ந்து
தன் கைவண்ணத்தால் தமிழ் மண்ணிற்கு
புகழ் சேர்த்த கலைஞன்!

**கலைக்கு விலை எதுவுமில்லை-உன்**
**மலைபோன்றபுகழுக்குமாற்றில்லை!**

கலாகேசரி ஆ. தப்பித்துரையின்
இழப்பினால் கவலை கொள்கிறோம்

குரும்பசிட்டி
(9390) கிராம அபிவிருத்திச் சங்கம்

## கண்ணீர் அஞ்சலி

### கலாகேசரி ஆ. தப்பித்துரை!

எம்மண்ணில் உறவாடிய கலைமகனே!
செதுக்கிய உன் கரங்கள் செயலிழந்து
செந்தழல் மீதவை உருக்கு வைத்த
செய்தி கேட்டு மீளாத்துயரில் மூழ்கி நிற்கின்றோம்.
உன் ஆத்ம சாந்திக்கு பிரார்த்திக்கும்

வளர்மதி சனசமூக நிலையம்
குருப்பசிட்டி.

(9391)

## முக்கிய அறிவித்தல்

கலை ஊடக இணைய அவசரநிர்வாக சபைக் கூட்டம் இன்று [13-9-1994] பி. ப. 3.00மணிக்கு கலை ஊடக இணைய காரியாலயத்தில் நடைபெறும், நிர்வாக சபை உறுப்பினர்கள் தவறாது கலந்து கொள்ளவும்.

செயலாளர்
கலை ஊடக இணையம்
(சி- 10328)

வெளியீட்டுரை :

| | |
|---|---|
| திரு இ. முருகையன் | பேராசிரியர் அ. சண்முகதாஸ் |
| டாக்டர் க. சிவபாலன் | பேராசிரியர் பொ. பாலசுந்தரப்பிள்ளை |
| திரு சுந்தரம் டிவகலாலா | திரு. வே. இளங்குமரன் |
| கலாநிதி க. குணராசா | சத்திரசிகிச்சை நிபுணர், |
| டாக்டர் எம். முருகானந்தன் | டாக்டர் எம். கணேசரட்ணம் |

★ அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றீர்கள் ★

அன்பளிப்பு:

**எஸ். எம். பெர்ணாண்டோ**
(S. M FERNANDO)
580, கேணல் கிட்டு சாலை,
(ஆஸ்பத்திரி வீதி)
யாழ்ப்பாணம்.

(சி-10322)

உ
சிவமயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான பவ வருடம் ஆவணி மாதம் 29-ம் நாள் (14-9-94)
புதன்கிழமை காலை 6.28 மணி முதல் 7.40 மணிவரை வரும்
சுபமுகூர்த்த வேளையில்

| | |
|---|---|
| (தவில் வித்துவான்)<br>(அகில இந்திய இசைவிழா புகழொளி கரவேக சுரதாள தியான கலியுக வரத பாலநந்தீஸ்வரர்) | நாதஸ்வரம் |
| கைதடி பழனிமலை - திலகவதி<br>தம்பதிகளின் புத்திரன் | கைதடி தங்கவேல் தங்கராணி<br>தம்பதிகளின் புத்திரி |
| திருநிறை செல்வன் | திருநிறைசெல்வி |
| **பஞ்சமூர்த்தி** | **தங்கரூபி** |
| (குணம்) அவர்கட்கும் | (ரூபி) அவர்கட்கும் |

இறைவன் திருவருளால் சாவகச்சேரி ஸ்ரீ துர்க்கையம்மன் தேவஸ்தானத்தில் திருமணம் நடைபெற திருவருள் கைகூடியுள்ளது. அன்று பிற்பகல் 3 மணிக்கு மணமகன் இல்லத்தில் நடைபெறும் வரவேற்புபசார வைபவத்தில் தாங்கள் குடும்பசமேதராய் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்கும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம், தங்கள் நல்வரவை நாடும்

திரு. பழனிமலை
குடும்பத்தினர்
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

(9388)

திரு. தங்கவேல்
குடும்பத்தினர்
கைதடி கிழக்கு, கைதடி.

**லெப். நெப்போலியன்** (சங்கரசிவம் விக்னேஸ்வரன் - தாவடி தெற்கு, கொக்குவில் - யாழ்)

**சந்திரபாபு** (யோகசிகாமணி ராகவன் - சட்டநாதர் வீதி, நல்லூர் - யாழ்)

**தமிழ்ச்செல்வன்** (நடராசா நந்தரூபன் - வண்ணாங்கேணி - பளை)

**விஜயன்** (கந்தப்பு தெய்வேந்திரம் - கரவெட்டி தெற்கு - யாழ்)

**குணேஸ்** (ஜெயரட்ணராசா ஜெகநாதன் - காங்கேசன்துறை, மயிலிட்டி - யாழ்)

**நிக்கலஸ்** (சுப்பையா ரவி - கப்பூது, கரவெட்டி - யாழ்)

**குருபரன்** (சங்கரலிங்கம் யோகேஸ்வரன் - கொக்குவில் மேற்கு - யாழ்)

மட்டு - சின்னவத்தைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**சைமன்** ( — — — கோயில்போரதீவு - மட்டு)

திருமலை - திரியாய் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய

**2-ம லெப். றொபின்** (மாரிமுத்து ரகுநாதன் - 3 ம் வட்டாரம், சாம்பல்தீவு - திருமலை)

1992-ம் ஆண்டு மணலாறு மாவட்டத்தில் தவறுதலாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப் பிரிந்த,

**ஒளியன்-கிரி** (தெய்வேந்திரன் இராஜதேவன் - நட்டாங்கண்டல் - மாங்குளம்)

**கதிரவன்** (தம்பிப்பிள்ளை சசிக்குமார் - அராலி வீதி - புதுக்குடியிருப்பு)

1993-ம் ஆண்டு யாழ் மாவட்டத்தில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட விபத்தில் எமைப் பிரிந்த,

**கப்டன் வண்ணன்** (சிதம்பரப்பிள்ளை வடிவேல் - பழம்பாசி - நெடுங்கேணி)

இதேதினம் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசங்களிலும், கடற்பரப்பிலும் சிறிலங்கா படையினராலும், இந்தியப் படையினராலும் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்கள்.

**ஆகியோரை இந்நாளில்**
**நினைவு கூருகின்றோம்.**

★ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-10324)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

## தொழிலாளர் பிரச்சினை அவுஸ்திரேலியா கவலை

(கொழும்பு)

பியகம சுதந்திர வர்த்தக வலயத்தில் இருக்கும் அன்செல் நிறுவனத்தின் தொழிலாளர் பிரச்சினை தீர்க்கப் படாமை குறித்து கொழும்பிலுள்ள அவுஸ்திரேலிய தூதுவரசம் கவலை தெரிவித்துள்ளது. அவுஸ்திரேலியாவின் பெரும் முதலீடான இந்நிறுவனத்தில் தொழிலாளர் பிரச்சினை நீடிப்பது எதிர்காலத்தில் அவுஸ்திரேலியாவின் இலங்கை முதலீடுகளை பெருமளவில் பாதிக்கும் என வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமரை அவரது அமைச்சில் சந்தித்த அவுஸ்திரேலிய தூதுவர் சுட்டிக் காட்டியுள்ளார். அத்துடன் தமது கவலையை பொதுஜன ஐக்கிய முன்னணி அரசுக்கு தெரிவிக்கும்படியும் அவர் கேட்டுக்கொண்டார்.

## களாலிகடலில் பயணிகளிடம் துணிகரத் திருட்டு

(தென்மராட்சி)

கிளாலிக் கடலில் பயணம் செய்த பயணிகளிடம் இரவு வேளை நடந்த துணிகரத் திருட்டு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

நேற்றுமுன்தினம் அதிகாலை ஆலங்கேணி கரையிலிருந்து படகுமூலம் கிளாலி நோக்கி வந்தகொழும்புப் பயணிகளிடம் இருந்த பல ஆயிரம் ரூபா பணமும் உடமைகளுமே திருடப்பட்டுள்ளன.

படகைத்தள்ளி இயங்கச் செய்தபின் படகிற்குள் ஏறிப் பார்த்தபோது தனது கால் சட்டைபையினுள் வைக்கப் பட்டிருந்த பத்தாயிரம் ரூபா காணாமல் போய்விட்டதாக அராலி தெற்கைச் சேர்ந்த அம்பலவாணர் சற்குணநாதன் தெரிவித்தார்.

இதேவேளை அப்படகில் பயணம் செய்த இவரது சகோதரியான அருண்மொழியின் கைப்பையினுள் வைக்கப்பட்டிருந்த முப்பதாயிரம் ரூபாவும் திருடப்பட்டிருந்தது இதுகுறித்து அவர் தெரிவிக்கையில் தன் கைப்பையினுள் பணம் வைத்திருந்ததாகவும் பை பிளேட்டால் வெட்டப்பட்டு அதனூடாக அப்பணம் எடுக்கப்பட்டிருந்ததாகவும் தெரிவித்தார். தான் கரையை வந்தடைந்ததும் பணத்தைப் பார்த்தபோது அது காணாமல் போயிருந்தது தெரிந்தது என்றார்.

இதேபோல் யாழ்ப்பாணம் றக்கா வீதியைச் சேர்ந்த திருமதி மா. மங்கயற்கரசி என்பவரும் தனது பையுடன் பணத்தையும் முக்கிய ஆவணங்களையும் பறிகொடுத்தார். இவர் தனது தோளில் மேற்படி பையை மாட்டியபடி இருந்துள்ளார்.

திடீரென தனது கைப் பையை தட்டியபோது அதை காணவில்லையாம். தோளில் அதன் பட்டி மட்டுமே தொங்கிக்கொண்டிருந்ததாம். இவரது பையினுள் 5500 ரூபா பணமும் முக்கிய ஆவணங்களும் திருடப்பட்டுவிட்டதாக நமது நிருபரிடம் தெரிவித்தார்.

ஒரே படகில் பயணம்செய்த இம்மூவரிடமும் நடந்த இத் துணிகரத் திருட்டு சம்பவங்கள் குறித்து பளை காவல் துறையினர் தீவிர விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (86)

## அவசரசிகிச்சைக்கு விமானம் மூலமாக சிறுவன் கொழும்பு பயணம்

(வடமராட்சி)

காய்ச்சலுக்கு இலக்கான சிறுவன் ஒருவன் அவசர சிகிச்சைக்காக விமான மூலம் நேற்று முன்தினம் கொழும்பு வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

யாழ். மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த மந்திகையைச் சேர்ந்த இ. பாஸ்கரன்(13) என்பவரே நரோமா கப்பல் மூலம் பலாலிக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து கொழும்புக்குக் கொண்டு போகப்பட்டார். (யோ)

## முதலாவது பிறந்ததின

## பொருளாதாரத் தடையை உடன் நீக்க நவசமசமாஜக் கட்சி கோரிக்கை

(கொழும்பு)

வடபகுதிக்கான பொருளாதாரத் தடையை உடன் நீக்கும்படியும், பூநகரி - சங்குப்பிட்டி பாதையை உடன்திறக்கும்படியும் கோரி நவசமசமாஜக் கட்சி சிறிலங்கா பிரதமர் திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்காவிற்கு கடிதம் எழுதியிருக்கிறது.

இக்கோரிக்கை அடங்கிய கடிதத்தை சிறிலங்காப் பிரதமருக்கு நவசமசமாஜக் கட்சியின் அரசியற்குழு உறுப்பினர் வி. திருநாவுக்கரசு எழுதியுள்ளார்.

இக் கடிதத்தில் மேலும் குறிப்பிடுகையில், யாழ்ப்பாணம் மற்றும் வன்னி மாவட்டங்களில் நடைபெற்ற தேர்தல் கேலிக்கு இடமானது எனவும், ஜனநாயக நடைமுறைக்கு விரோதமானது எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## பொலிஸ் உயர் அதிகாரிகளுக்கு 7 கோடி ரூபா செலவில் கார்கள்

### முன்னாள் ஐ. தே. க. அரசு ஏற்பாடு செய்தது

(கொழும்பு)

முன்னாள் ஐ. தே. க அரசினால் பொலிஸ் உயர் அதிகாரிகளுக்கு என கொள்வனவு செய்யப்பட்ட 7 கோடி ரூபா பெறுமதியான பிரெஞ் தயாரிப்பு பேர்ஜோ ரக கார்கள் அடுத்த வாரம் கொழும்பு வந்து சேரவுள்ளன.

புதிதாக கொள்வனவு செய்யப்பட்ட 110 கார்களில் 60 கார்கள் பொலிஸ் டி ஐ ஜிகளுக்கென தருவிக்கப்பட்டவை 50 கொரிய தயாரிப்பு டெய்வூ ரக கார்கள் பொலிஸ் சுப்பிரின்டன்களுக்காக இறக்குமதி செய்யப்படுகிறது.

எனினும் புதிய அரசு 60 வயதுக்கு மேற்பட்ட பொலிஸ் அதிகாரிகளை ஓய்வு பெறுமாறு பணித்துள்ளதால் இக் கார்கள் திட்டமிட்டபடி பொலிஸ் திணைக்களத்திற்கு பங்கிடப்படமாட்டாது என பொலிஸ் வட்டாரங்களில் கருதப்படுகிறது. முன்னைய ஐ. தே. க அரசு பொலிஸ் டி. ஐ ஜி களின் எண்ணிக்கையை அதிகரிக்கமுடிவெடுத்ததற்கு அமையவே இக்கார்களை தருவிக்க ஏற்பாடு செய்ததாக கூறப்படுகிறது.

கடந்த வருடத்தில் பட்டும் ஓய்வு பெறும் வயதைக் கடந்தும் 24 பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## சைக்கிள் திருட்டு

(தென்மராட்சி)

தென்மராட்சியில் சைக்கிள் திருட்டுகள் அதிகரித்துவருவதாகவும் கடந்த வாரம் இரு சைக்கிள்கள் திருடப்பட்டுள்ளதாகவும் புகாரிடப்பட்டுள்ளது.

கடந்த நாலாம் திகதி பெரிய பளையைச் சேர்ந்த சி. சிறிகாந்தன் என்பவரின், சந்தைக்கு முன்பாக நிறுத்தி விட்டு சென்ற சைக்கிளும் பையினுள் இருந்த ஆயிரம் ரூபா பணமும் களவாடப்பட்டது.

இதே போல் கடந்த ஒன்பதாம் திகதி பேராளைப் பகுதியில் நாகர் கோவில் பகுதியைச்சேர்ந்த க. மேனன் என்பவரின் வீட்டிற்குள்விட்டிருந்த லுமாலா சைக்கிளும் திருடப்பட்டது இத் திருட்டு குறித்துபளைகாவல்துறையில் புகாரிடப்பட்டுள்ளது. (86)

## மலேரியா பீடிப்பு

(யாழ்ப்பாணம்)

தீவக மக்கள் தங்கியுள்ள அரியாலை டயஸ் குடியிருப்பில் தற்போது மலேரியாக் காய்ச்சல் பரவியுள்ளது. எழுபத்தைந்து வீதமானோர் இக்

அரசியல் பழிவாங்கலினால்

## பாதிக்கப்பட்ட ஊழியர்க்கு நிதியுதவி வழங்க ஏற்பாடு

(கொழும்பு)

1977க்கு பின் அரசியல் பழிவாங்கலினால் பாதிக்கப்பட்ட ஊழியர்களுக்கு நிதிவழங்க பிரதமர் சந்திரிகா முடிவுசெய்துள்ளார்.

அமைச்சுகள், திணைக்களங்கள், கூட்டுத் தாபனங்கள் ஆகியவற்றில் பதவியை, பதவி உயர்வு அல்லது வேறுவாய்ப்புக்களை இழந்த ஊழியர்களுக்கு நிவாரணம் வழங்கப்படும். 1980 பொது வேலை நிறுத்தத்தில் பங்கு பற்றியமைக்காக வேலை இழந்த ஊழியர் விடயத்தில் விசேட கவனம் செலுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பாதிக்கப்பட்ட ஊழியர்களின் விபரப்பட்டியலை சமர்ப்பிக்கும்படி அமைச்சுகளின் செயலாளர்கள் பணிக்கப்பட்டுள்ளனர்; இப்பட்டியல் கிடைத்ததும் அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டு பிரதமரிடம் கையளிக்கப்படும்.

## வடபகுதிக்கான நிவாரணம் நிறுத்தப்படமாட்டாது

### ஆயர் குழுவிடம் சந்திரிகா தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா அரசினால் வடபகுதிமக்களிற்கு வழங்கப்படும் நிவாரண விநியோகங்கள் நிறுத்தப்பட மாட்டாது என புதிய பிரதமர் தம்மைச் சந்தித்த ஆயர் குழுவிடம் தெரிவித்தார்.

யாழ் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம், மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் அவர்கள் சென்ற மாதம் சிறிலங்காவின் புதிய பிரதமர் சந்திரிகா குமாரணதுங்காவைச் சந்தித்து தமிழ் மக்களின் துன்ப துயரங்களையும் அவர்களிற்கு புனர்வாழ்வு உதவிகள் வழங்க வேண்டிய அவசியத்தையும் விளக்கியபோதே பிரதமர் ஆயர்களிடம் மேற்படி தெரிவித்திருந்தார். (88)

## யாழ்ப்பாண பல்கலைக்கழகம், இலங்கை 14-வது பட்டமளிப்பு விழா





## முதலாவது பிறந்ததின வாழ்த்து

13-09-1994



### செல்வன் சி.கஜந்தன் (கஜன்)

கைதடியைச் சேர்ந்த சிவராஜா (ரவி) குணாநிதி (குணா) தம்பதிகளின் செல்வப் புதல்வன் கஜந்தன் தனது முதலாவது பிறந்ததினத்தை 13.09.94 செவ்வாய்க்கிழமை தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இல்லறச் சோலைக்கு சந்தோஷத் தென்றலாய் வந்த கஜன்மீது வாழ்த்துப் பூக்களை வழங்குவோர் பிரியமான அப்பா, அம்மா, மாங்குளத்தில் வசிக்கும் அப்பப்பா, அப்பம்மா, மாமா, மாமி, மச்சான்மார் கிரிராஜ் கிரிஷாந் மச்சாள்மார் சஞ்சுதா, சஞ்சிகா மற்றும் சின்ன அப்பம்மா, அம்மம்மா, மோகன் பெரியப்பா, பெரியம்மா தங்கை கீர்த்தனா, சித்திரா அத்தை மற்றும் கைதடியைச் சேர்ந்த அம்மப்பா, அம்மம்மா சின்னமாமா மற்றும் சுவிசில் வசிக்கும் சிவா பெரியம்மா, பெரியப்பா, ஆசை அண்ணா சுகிசன், ரவிமாமா, மாமி மற்றும் குஞ்சுமாமா, மாமி ஆகியோரும் கோபி, மதி, தில்லை, மித்திரன், உற்றார், உறவினர், நண்பர்கள் எல்லாம் வல்ல கைதடி வீரகத்திப்பிள்ளையார் அருளால் பல்லாண்டு காலம் சிறப்புடன் கஜன் வாழ இவர்கள் வாழ்த்துகின்றார்கள்.

தகவல்:- கா. சிவராஜா (ரவி)
கைதடி.

(9326)


காய்ச்சல் பரவியுள்ளது. எழுபத்தைந்து வீதமானோர் இக்காய்ச்சலினால் பீடிக்கப்பட்டுள்ளதாக குடியிருப்பு நிர்வாகத்தினர் தரப்பில் கூறப்பட்டது. அத்துடன் இங்கு கண் நோய், சாதாரண காய்ச்சல் என்பனவும் பரவியுள்ளன. ஒரு சிலரிடையே நிமோனியாக் காய்ச்சல் காணப்படுவதாகவும் கூறப்பட்டது. [22]


### கல்விப் பட்டப்பின் தகைமைச் சான்றிதழ் ஆண்டுத் தேர்வு 1993

கல்விப் பட்டப்பின் தகைமைச் சான்றிதழ் முழுநேர, பகுதிநேர - 1 பகுதி நேரம் பகுதி- 11 ஆகிய மாணவர்கள் ஆண்டுப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரிகள் ஒரு பாடத்திற்கு 50/- வீதம் மக்கள் வங்கிக்கிளையில் செலுத்தி பற்றுச்சீட்டை விண்ணப்பங்களுடன் இணைத்து ஒக்டோபர் 14-ந் திகதிக்கு முன்னர் பரீட்சைக் கிளையில் சமர்ப்பிக்கவேண்டும். பரீட்சை அனுமதி அட்டைகளை ஒக்டோபர் 27,28 திகதிகளில் பெற்றுக் கொள்ளலாம். பரீட்சைகள் நவம்பர் 14-ந் திகதி ஆரம்பம் ஆகும்.

பதிவாளர்.

(சி-10327)





யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் 14வது பட்டமளிப்பு விழா 1994-09-10 அன்று காலை 9.00 மணி, 11.00 மணி, பிற்பகல் 2.00 மணி என்ற ஒழுங்கில் நடைபெற்றது. துணைவேந்தர் பேராசிரியர் சுந்தையா குணரெத்தினம் தலைமை தாங்கினார்.

1வது அமர்வில் காலம் சென்ற பேராசிரியர் அழகையா துரைராசாவுக்கு (யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர்) விஞ்ஞான கலாநிதி என்னும் கௌரவப்பட்டம் தேகாந்த நிலையில் வழங்கப்பட்டது.

தொடர்ந்து அதே அமர்வில் கலாநிதிப்பட்டம் கல்வியில் பட்டப்பின் தகைமைச் சான்றிதழ், ஆங்கிலமொழி கற்பித்தலில் பட்டப்பின் தகைமைச் சான்றிதழ், மருத்துவ சத்திர சிகிச்சைமாணி, வர்த்தகமாணி ஆகிய பட்டங்கள் வழங்கப்பட்டன.

2வது அமர்வில் முதுவிஞ்ஞானமாணி, விஞ்ஞானமாணி, தொழில் நிர்வாக மாணி ஆகிய பட்டங்கள் வழங்கப்பட்டன.

3வது அமர்வில் முதுமெய்யியல்மாணி, முதுகலைமாணி, கலைமாணி, இசைக் கலைமணி, நாட்டியகலைமணி, சித்தமருத்துவ சத்திர சிகிச்சைமாணி ஆகிய பட்டங்கள் வழங்கப்பட்டன.

பரீட்சையில் திறமையுடன் சித்தியடைந்து பட்டம் பெற்றவர்களுக்கு ஒவ்வொரு அமர்வின் முடிவிலும் பரிசில்களும், புலமைப் பரிசில்களும் வழங்கப்பட்டன.

மறைந்த பேராசிரியர் அழகையா துரைராசாவின் பெயரில் கல்வி, விளையாட்டு, கலை ஆகிய துறைகளில் பல்கலைக்கழகத்திற்கு ஒன்றும், ஏனைய பீடங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொன்றாக 5 தங்கப் பதக்கங்கள் பரிசளிக்கப்படும். இவ்வாண்டு பல்கலைக்கழக பதக்கத்தை யொசப் சந்தியோ மெக்கல் கொலின்ஸ், கலைப் பீடப் பதக்கத்தை யொசப் சந்தியோ மெக்கல் கொலின்ஸ், விஞ்ஞான பீடப் பதக்கத்தை முருகையா முரளிதரன் ஆகியோர் பெற்றுக் கொண்டார்கள்.

மறைந்த பேராசிரியர் பி. சந்திரசேகரம் அவர்களின் நினைவாக வழங்கப்படும் தங்கப் பதக்கத்தை கல்வியில் பட்டப்பின் தகைமைச் சான்றிதழ் பரீட்சையில் திறமையாக சித்தியடைந்த திருமதி சசிகலா குகமூர்த்தி அவர்கள் பெற்றுக் கொண்டார்கள்.

இப் பட்டமளிப்பு விழாவில் 642 பட்டங்களும், 4 தங்கப் பதக்கங்களும், 45 பரிசில்களும் புலமைப் பரிசில்களும் வழங்கப்பட்டன.

- பதிவாளர்

(சி-10325)

இலங்கை இனப்பிரச்சினை

# கிளின்டன் சந்தர்ப்பத்தை இறுக பற்றிக்கொள்ள வேண்டும்

## அமெரிக்க பத்திரிகை தெரிவிப்பு

(வாஷிங்டன்)

தீர்க்கப்பட்ட தென் ஆபிரிக்கா மற்றும் மத்திய கிழக்கு பிரச்சினைகளிலிருந்து தீர்க்கப்படாத பால்கன் பிரச்சினையிலிருந்தும் கற்றுக்கொள்ள வேண்டிய பாடம் ஒன்றுள்ளது சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான சந்தர்ப்பங்கள் விரைவாகச் சென்றுவிடக்கூடியவை என்பதும் அவை மறைவதற்கு முன்பாகவே அவற்றைப்பிடித்து விடவேண்டும் என்பதுவே அந்தப் பாடமாகும் இவ்வாறு இலங்கையின் தற்போதைய நிலை குறித்து கருத்து வெளியிட்ட அமெரிக்க நாளிதழான த பொஸ்ரன் குளோப் தெரிவித்துள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இப்படியான ஒரு சந்தர்ப்பம் அழகான ஆனால் யுத்தத்தினால் சின்னாபின்னமடைந்துள்ள இலங்கைத் தீவில் உருவாகியுள்ளது.

அங்கு நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் அரசாங்கம் மாற்றமடைந்துள்ளதுடன் சந்திரிகா குமாரணதுங்க பிரதமராகப தவி ஏற்றுள்ளார். சிங்கள பௌத்தர்களை பெரும்பான்மையாகக் கொண்ட இலங்கையின் அரசிற்கும் வட-கிழக்கிலுள்ள தமிழ் பிரிவினை வாதிகளுக்கும் இடையே 11வருட காலமாக நடைபெற்றுவரும் கொடூர யுத்தத்திற்கு முடிவு காண்பதாக தனது பிரசாரங்களின் போது சந்திரிகா உறுதியளித்தார்.

அமைதிக்குத் தேவையான புதிய மாற்றங்களை மேற்கொள்வதற்கான ஓர் ஆணையை வாக்காளர்கள் சந்திரிகா அரசுக்கு வழங்கியுள்ளார்கள் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தல் முடிவடைவதற்கு முன்னர் அவர்களால் இதற்கான முயற்சிகளை ஆரம்பிக்க முடியாது. அத்துடன் அவர்களிடம் ஓர் திடமான உறுதிப்பாடும் அரசியல் தந்திரமும் இருக்க வேண்டும்.

முன்னைய அரச கட்சியான ஐ. தே. க அமெரிக்காவுடன் நெருக்கமான உறவுகளை நீண்ட காலமாக வைத்திருந்தது. கிளின்டன் நிர்வாகத்திடமிருந்து மேற்கொள்ளப் படக்கூடிய உயர்மட்ட ஊக்குவிப்புகள் ஒரு சமஷ்டி அமைப்பை உருவாக்க ஆதரவான மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுக் கொடுப்பதாக இருக்கலாம்.

ஜனாதிபதி கிளின்டன் இந்த சந்தர்ப்பத்தை இறுகப் பற்றிக் கொண்டால் யுத்தத்தினால் சோர்ந்துள்ள இலங்கையரினதும் அவர்களின் அண்டை நாடான இந்தியாவினதும் நன்றியை அமெரிக்கா பெறலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கட்சிகளின் மூலதனமாக இனப்பிரச்சினை உள்ளது

## முன்னாள் அமைச்சர் ஹமிட்

(கொழும்பு)

கட்சிகளின் அரசியல் மூலதனமென இனப்பிரச்சினையை கருதி அதனை கையாள முனைவதே அப் பிரச்சினை தீர்த்து வைக்கப்படாமல் நீடிப்பதற்குக் காரணம் என முன்னாள் அமைச்சர் ஏ சி. எஸ் ஹமிட் தெரிவித்துள்ளார்.

நான் ஒருவருடமாக விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினேன் சர்வ கட்சி மாநாட்டிற்கு 10 மாதங்களாக தலைமை தாங்கினேன். பிரித்தானிய பாராளுமன்றில் அயர்லாந்து பிரச்சினை தொடர்பாக ஒருநாள் கூட விவாதித்தது கிடையாது ஆனால் பல தினங்கள் விவாதிக்கின்றோம் கட்சிகள் அரசியல் மூலதனமாக இப் பிரச்சினையை கைக்கொள்ள முனைவதே பிரச்சினை நீடிப்பிற்கு காரணம் என அவர் குறிப்பிட்டார்.

# தென்மாகாண முதல்வர் தெரிவு செய்ய ஏற்பாடு

(கொழும்பு)

தென் மாகாண சபையில் அதிகாரத்தைக் கொண்டிருக்கும் பொதுஜன ஐக்கிய முன்னணி புதிய முதலமைச்சர் ஒருவரை நியமிப்பது குறித்து நேற்று தீர்மானம் எடுப்பதாக இருந்தது.

தென்மாகாண சபையின் பொ.ஐ.மு. உறுப்பினர்கள் நேற்று பிற்பகல் சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் விசேட கூட்டம் ஒன்றை நடத்தினர் இரகசிய வாக்கெடுப்பு மூலமாக அவர்கள் முதலமைச்சரைத் தெரிவு செய்வதாக இருந்தது.

முன்னைய முதலமைச்சர் அமரசிறி தொடங்கொட அமைச்சராக தெரிவாகி விட்டதால் தென் மாகாண முதலமைச்சரைத் தெரிவு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

ஒரே நாளில் 157 பேர்

# காணாமற் போனோர் நினைவாக வழிபாடு

# ஈ.பி.டி.பி. - இராணுவம் தீவகத்தில் முறுகல் நிலை

தீவகப்பகுதியில் நிலை கொண்டுள்ளசிறிலங்கா இராணுவத்தினருக்கும் ஈ பி டி.பி. யினருக்கு மிடையிலான முறுகல் நிலை அதிகரித்து வருவதாக தெரியவந்துள்ளது.

அண்மையில் நடைபெற்ற பொதுத் தேர்தலின் பின்னரே இவர்களுக்கிடையிலான முறுகல் உச்சக் கட்டத்தை அடைந்துள்ளதாகவும் இவற்றால் ஈ.பி டி பி. உறுப்பினர்கள் சிலர் காயமடைந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த வாரம் குறிகாட்டுவான், வேலணை, ஊர்காவற்துறைப் பகுதிகளில் ஏற்பட்ட முறுகலைத்தொடர்ந்து ஈ.பி டி பி. யினரை சில மணிநேரம் படையினர் தடுத்து வைத்திருந்ததாகவும் அறிய வருகிறது.

இதை அடுத்து நெடுந்தீவு சென்ற படையினரை ஈ. பி டி.பி. யினர் தடுத்து நிறுத்தியதை அடுத்து மேலதிக படையினர் வரவழைக்கப்பட்டதுடன் ஈ பி டி.பி அலுவலகமும் சோதனையிடப்பட்டது.

அத்துடன் நயினாதீவு சென்ற ஈ.பி டி பி யினரை கடற்படை தடுத்து திருப்பி அனுப்பியது இதனால் ஆத்திரமுற்ற அவர்கள் நயினா தீவு மக்கள் மீது கெடுபிடிகளை மேற்கொண்டதுடன் உணவுப் பற்றாக்குறையும் ஏற்படுத்தி போக்குவரத்தினையும் தடுத்து வருவதாக சுட்டிக் காட்டப் படுகிறது. (88,நி)

# மா வந்துசேர்ந்ததும் தாராள விநியோகம்

## திட்டப் பணிப்பாளர் தகவல்

இரண்டொரு தினங்களில் யாழ். புனர்வாழ்வுப் பகுதியினரிற்கு மாவு வந்துவிடும். இது வந்து சேர்ந்ததும் குடாநாட்டில் மாவு கிலோ ஏழு ரூபாப்படி தாராளமாக விநியோகிக்கப்படவுள்ளதாக யாழ் செயலக புனர்வாழ்வுப் பகுதி திட்டப் பணிப்பாளர் தெரிவிக்கின்றார்.

பேக்கரிகளிற்கு விநியோகிக்கும் கோதுமை மாவின் அளவில் எந்த குறைவும் ஏற்படாது தொடர்ந்து வாரம் ஒன்றிற்கு 270 மெற்றிக் தொன் மாவு கிலோ ஏழு ரூபா வீதம் விநியோகித்து வருவதாக பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

இன்னும் ஓரிரு தினங்களில் யாழ் செயலக புனர்வாழ்வுப் பகுதியால் யாழ் குடாநாட்டில் கோதுமை மாவு தாராளமாக விநியோகிக்கப்படவுள்ளதாக மேலும் தெரியவருகிறது. (88), (நி)

# அனுமதியின்றி சிரேஷ்ட அதிகாரிகள் அழைப்பிற்கு பிரிகேடியர் கண்டனம்

## இராணுவதளபதிக்கு கடிதம்


வடபகுதியின் மூத்த இராணுவ தளபதியான பிரிகேடியர் அசோக ஜெயவர்த்தனா தனது அனுமதியின்றி தன்னிடம் பணியாற்றும் சிரேஷ்ட அதிகாரிகளை கொழும்பிற்கு அழைத்து வடக்கு - கிழக்கு தேர்தல் பணிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கும்படி கட்டளையிட்டது குறித்து தனது கடும் ஆட்சேபனையை தெரிவித்துள்ளார்.

வழமையான வழிமுறைகளுக்கு மாறாக தனது உதவியாளர்களை மேலிடம் கட்டளை பிறப்பிப்பது அவர்கள் பணியாற்றுவதற்கு இடையூறாக இருக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். மேலும் பிரிகேடியர் ஜெயவர்த்தனா இராணுவத் தளபதி ஜெரி டி சில்வாவிற்கு எழுதிய கடிதத்தில் ஏற்கனவே நியமிக்கப்பட்ட தளபதிகள் மேல் நாம் நம்பிக்கைவைக்க வேண்டியது அவசியமானதாகும் எனவும் அதேவேளை படைத்தளபதிகளை தம் கீழ் உள்ள பணியாளர்களின் நிபந்தனைகளுக்கு உட்படாது பணியாற்றும் நிலை இல்லை என்றால் நாம் நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாது எனவும் தெரிவித்துள்ளார்.

# பயிற்சி முடித்து வெளியேற்றம்

மனித முன்னேற்ற நிலையத்தினரால் பயிற்சியளிக்கப்பட்ட முதல் தொகுதி பயிற்சி

# 5-ம் ஆண்டு நீங்காத நினைவலைகள்



# 6-ம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில் 1959-11-15

தாயக விடிவில் 1988-9 13

## லெப். குகன் (இளஞ்சிங்கம் இளஞ்செழியன்)

ஆண்டு ஆறு சென்றாலும் அழியாது உன்நினைவு
மாண்டு நீ சென்றாலும் மறையாது உன் கனவு
மீண்டு நீ வந்தாலும் குறையாது உன் அன்பு
தூண்டு தையா உன் வீரம் மறச் சமரின் முன் நிற்க
வேண்டுகிறோம் குகன் என்ற பெயருக்கு
- கிடைத்திடவே
மாண்டு விடவில்லை நீ மாண்புடனே வாழ்கின்றாய்.

குறளகம்
கரவெட்டி கிழக்கு
(9385)

அப்பு, அம்மா
சகோதரர்கள்

# 41-ம் நினைவு நாள்



பிறப்பு: 11. 10. 1956

அழிப்பு: 04 . 08. 1994

## நினைவாக வழிபாடு

மட்டக்களப்பில் 157 பேர் ஒரே நாளில் காணாமற் போன சம்பவத்தின் 4 ஆண்டு பூர்த்தி நினைவாக கடந்த வெள்ளியன்று சத்துருக் கொண்டான் ஆலயத்தில் பூசை வழிபாடுகள் நடைபெற்றன.

1990 செப்டம்பர் 9 ஆம் திகதி சத்துருக்கொண்டான் பிள்ளையாரடி, கொக்குவில். பனிச்சையடி, ஆகிய இடங்களைச் சேர்ந்த ஆண்கள், பெண்கள், பிள்ளைகள் உட்பட 157 பேர் படையினரால் கொண்டுசெல்லப்பட்டு பின் காணாமற் போயினர். இன்று வரை அவர்கள் குறித்த விபரம் அறிவிக்கப்படவில்லை.

## பெரும் மின் பற்றாக்குறை அடுத்த ஆண்டில் ஏற்படும்?

அடுத்த ஆண்டில் பெரும் மின்சாரத் தட்டுப்பாட்டை சந்திக்கும் நிலை ஏற்படலாம் என மின்சாரசபை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். தற்சமயம் தயாராகும் அளவிலிருந்து 10 அல்லது 12 வீத பற்றாக்குறை நிலவும் என எதிர் பார்க்கப்படுகிறது.

பற்றாக்குறையின் உச்ச கட்டத்தில் நான்கு நாட்களுக்கு ஒரு முறை முழு நாள் மின்வெட்டை அமுல் படுத்தும் நிலை ஏற்படும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

## ஆலமரம் வீழ்ந்ததில் பிக்கு நசுங்கிப் பலி

(கொழும்பு)

கம்புறுப்பிட்டியவில் விகாரையொன்றில் நித்திரை செய்து கொண்டிருந்த பௌத்த பிக்குவின் தலை மீது ஆலமரம் முறிந்து வீழ்ந்ததில் அவர் ஸ்தலத்திலேயே மரணமானார்.

சம்பவதினம் கடும் காற்றுடன் மழைபெய்ததாகவும் இதனால் விகாரைக்கு அருகில் நின்ற ஆலமரம் விகாரை மீது வீழ்ந்தது. அங்கே நித்திரை செய்துகொண்டிருந்த பிக்கு இடிபாடுகளினுள் சிக்கி மரணமானார்.

## மீண்டும் மலேரியா பரவும் அபாயம்

தென்மராட்சியில் பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் மீண்டும் மலேரியா பரவும் அபாயம் தோன்றியுள்ளதாக சுகாதார சேவைப் பரிசோதகர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து நமது செய்தியாளர் இவரைச் சந்தித்த போது யாழ்மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேசத்திலேயே மலேரியா நோய் கூடுதலாகக் காணப்பட்டது. தற்போது கிளாலி, சோரன்பற்று, வண்ணாங்கேணி, அரசகேணி, புலோப்பளை போன்ற இடங்களில் தீவிரமாகப்பரவும் சாத்தியக்கூறுகள் உண்டு எனவும் மருந்து அடிப்பதன் மூலம் 50 வீதம் மட்டுமே கட்டுப்படுத்தக் கூடியதாக இருக்கும் எனவும் அவர் தெரிவித்தார். (86)

யத்தினரால் பயிற்சியளிக்கப்பட்ட முதல் தொகுதி பயிற்சியாளர்கள் இருபது பேர் பயிற்சியை முடித்து வெளியேறியுள்ளனர்.

இவர்களிற்கான ஆறுமாதகால இலவச பயிற்சி தையல், கேக் ஐசிங், அழகியற்கலை, ஆகியதுறைகளில் இயக்குனர் அருட்திரு ஜெபநேசன் அவர்களால் நடைமுறைப்படுத்தப்பட்டது.

இவர்களது பயிற்சிக்காலத்தில் மூன்றுமாத காலத்திற்கு தேவையான மூலப்பொருட்களும் மேற்படி நிறுவனத்தினால் இலவசமாக வழங்கப்பட்டுபயிற்சியளிக்கப்பட்டது.

அடுத்த தொகுதி பயிற்சிக்கு கூடுதலான பயிற்சியாளர்கள் சேர்த்துக் கொள்ளவுள்ளனர். (88)

## கலைநிகழ்வு

நாவற்குழி லவனிதா குடியிருப்பில் இயங்கும் சிறுவர் போசாக்கு பராமரிப்புப் பூங்காவின் மாதாந்த கலை நிகழ்வும் கூட்டமும் 15-ம் திகதி வியாழக்கிழமை இரவு நடைபெறும். பூங்கா நிர்வாகத்தினர் மற்றும் விடுதலைப் புலிகளின் பிரமுகர்கள் ஆகியோரின் சிறப்புரைகளுடன் பூங்கா சிறார்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். [22]

## வாளிகள் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

அரியாலை டயஸ் குடியிருப்பு மக்களின் மலசல கூடப் பாவனைக்கென குடியிருப்பை நிர்வகித்து வரும் அகதிகள் புனர்வாழ்வு நிதியம்பதினேழு வாளிகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளது. குடியிருப்பில் உள்ள 20 நிரந்தர மலசல கூடங்களுக்கும் கிணற்றுப் பாவனைக்குமாக ஏழு பிளாஸ்ரிக் வாளிகளும் பத்து இரும்பு வாளிகளும் மேற்படி நிதியத்தினால் அண்மையில் வழங்கப்பட்டுள்ளன. (22)



உயர்திரு.

### நமசிவாயம் தெய்வேந்திரன்

(நாதன்)

பிறப்பு: 15-09-1958 இறப்பு: 22-09-1989

காலங்கள் கரைந்தோடினவே
கண்மணியே நீங்கள் மறைந்தும்
ஆண்டுகள் ஐந்தாகியதே, ஆறவில்லை
இன்பமாய் பேசிட்ட இனிய நாள் வாராவோ?
துன்பமே கண்டறியோம் தூயவரே நீங்களிருப்பின்
அன்புற்று அனைவருமே அணைந்திருக்க காணாத
வன்புற்ற காலனும் வலிந்தே கவர்ந்தானோ
நந்தா விளக்காய் நாயகனாய் நானிலத்தில்
தந்தாய் எமக்கெல்லாம் தயவாய் நன்மையினை
எங்கே சென்றிட்டீர்? இனி நீங்கள் வருமளவும்
சிந்தை கலங்கி தேடிடுவோம் காலமெல்லாம்!

உங்கள் அன்புமிகு
அம்மா, ஆசையம்மா, சகோதரர்கள்,
மைத்துனர், மருமக்கள்.

வேலணை கிழக்கு,
வேலணை 03, (9381)

### திருமதி இராஜலட்சுமிதேவி தர்மராசா

[மல்லாகம்]

| | | |
|---|---|---|
| வானில் | இருந்து | வீழ்ந்த குண்டு |
| வழியின்றி | உன்னைச் | சிதைத்ததோ |
| எம்மை | யெல்லாம் | தவிக்கவிட்டு |
| உம்மை | மட்டும் | பிரித்ததோ! |

ஆறாத் துயரில் அல்லலுறும்
கணவன், பிள்ளைகள்,
உறவினர், நண்பர்கள்
(9382)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு:
1967-9-16

உதிர்வு
24-09-1993

### நமசிவாயம் ஜெயராசா

குடும்பத்தின் ஒளி விளக்காய், பாசத்தின் சிகரமாய் விளங்கிய நீ விண்ணுலகை சென்றடைந்தாயோ மகனே! அன்புச்செல்வமே! அன்னை தந்தையை அன்புக்கினிய வார்த்தைகளால் மொழி பகர்ந்த நீ எங்கய்யா சென்று விட்டாய்? ஆசையோடு அன்பை ஈந்த தங்கையை மறந்து, அன்புச்சகோதரனை, பாசத்துடன் பழகிய நண்பர்களை மறந்து. விண்ணுலகை சென்றடைய நாம் செய்த பாவம் தான் என்னவோ? அன்புச் செல்வமே, உன் ஆத்மா சாந்தி அடைவதாக.

ஓம்! சாந்தி சாந்தி சாந்தி!

உன் பிரிவால் துயருறும்
ந. தவசி குடும்பத்தினர்

சிறுப்பிட்டி தெற்கு,
நீர்வேலி. (9311)

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

**சிந்தனைக்கு..**

நெருக்கமாய் இரு; ஆனால் கீழ்த்தரமாக அல்ல.
- ஷேக்ஸ்பியர்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம், 13 09-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால்பெட்டி எண்- 05

## ஆனையிறவுப் பாதை

யாழ். குடாநாட்டிற்கான தரைவழிப் பாதை திறப்பது தொடர்பாக பொது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் முன்னேற்றகரமான திட்டம் எதையும் வெளிப்படுத்தியுள்ளதாகத் தெரியவில்லை. கேரதீவு- சங்குப்பிட்டிப் பாதை தொடர்பாக இடைக்கிடை அரசாங்கம் பேசிக் கொண்டாலும், ஆனையிறவுப் பாதையைத் திறப்பதே அதன் விருப்பமாக/ சந்திக்குட்பட்டதாக உள்ளதுபோல் தெரிகின்றது.

இது குறித்துப் பத்திரிகையாளரிடம் பேசிய பிரதிப் பாதுகாப்பு அமைச்சரான கேணல் அநுருத்த ரத்வத்த 'வடபகுதி மக்கள் பாதுகாப்பாகப் பயணம் செய்வதை உறுதிப்படுத்தவும், வடக்கிற்குப் பொருள்களை இலகுவாகக் கொண்டு சேர்ப்பதற்கும் வசதியாக கேரதீவு- சங்குப்பிட்டிப் பாதையைத் திறப்பதற்குப் பதிலாக, ஆனையிறவுப் பாதையை திறப்பதற்கு அரசாங்கம் விரும்புகின்றது' எனத் தெரிவித்துள்ளார்.

இந்தவகையில் குடாநாட்டிற்கான தரைவழிப் பாதை விடயத்தில் முன்னைய ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் இருந்து பெரியளவில் புதிய அரசாங்கமும் மாற்றமான சிந்தனையைக் கொண்டிருக்கவில்லை- சிந்திக்க முடியவில்லை என்றே எண்ணத் தோன்றுகின்றது. ஏனெனில் 1992 யூலையில் கொம்படி- ஊரியான் பாதை மூடப்பட்டதில் இருந்தே ஆனையிறவுப்பாதை திறப்பதற்கு அரசாங்கம் தயாராக இருப்பதாகவே அறிவித்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

இதற்கு முக்கிய காரணியாக அமைந்தது 1992ஆம் ஆண்டு இராணுவத்தின் யாழ். குடாநாட்டின் மீதான முற்றுகைத் திட்டத்தின் பின் ஆனையிறவுப் பாதை தவிர வேறு பாதை ஒன்றைத் திறப்பதற்கு இராணுவம் தயாராக இருக்கவில்லை என்பதே ஆகும். ஆனையிறவுப் பாதை திறப்பதன் மூலமே யாழ். குடாநாட்டிற்கான போக்குவரத்துப் பாதையை முற்றாகத் தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கலாம் என்பது இராணுவத்தின் திட்டமாகும்.

இதேசமயம் பொது ஜன ஐக்கிய முன்னணி இனப்பிரச்சினை விவகாரத்தில் ஐ. தே. க. அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் இருந்து வேறு வகையான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது. வடக்கு - கிழக்கில் இடம் பெறு

# குர்தீஷ் மக்களுக்கு மீண்டும் ஒரு தடவை ஏகாதிபத்தியங்கள் கொடுத்துள்ள ஏமாற்றம்

குர்தீஷ் மக்களின் சுதந்திரப் போராட்டத்திற்கு அமெரிக்காவும், ஏனைய ஐரோப்பிய நாடுகளும் வழங்கிய ஆதரவு எத்தகையது, எந்நோக்கத்தைக் கொண்டது என்பது அண்மைக்காலமாகவே புரியத் தொடங்கி விட்டது குர்தீஷ் மக்களின் போராட்ட வரலாறு ஏகாதிபத்தியங்களின் துரோகத்தினால் நிறைந்தது. அவர்கள் மீண்டும் மீண்டும் ஏமாற்றப்பட்டனர்

ஜனநாயகத்தை பரப்புவதில் பெரும் பற்றுக் கொண்டதாக கூறிக் கொள்ளும் அமெரிக்காவும் ஏனைய மேற்கு நாடுகளும் குர்தீஷ்களை கட்டியணைக்க விரைந்தன என நினைத்தால் அது நிச்சயமாக தவறானதாகும். குர்தீஷ் பிராந்திய அரசுக்கு அங்கீகாரம் அளிப்பதாக இருக்கக் கூடிய எதையும் கூறுவதையோ அல்லது செய்வதையோ அமெரிக்கா தவிர்த்தே வந்துள்ளது குர்தீஷ் அல்லது குர்தீஷ்தான் என்ற சொற்களை பயன்படுத்துவதைக் கூட அமெரிக்க இராஜங்க அமைச்சு தவிர்த்து வருகிறது. குர்தீஷ்தான் பிராந்தியம் வடக்கு ஈராக் என்று மட்டுமே குறிப்பிடப்படுகிறது.

### அமெரிக்காவின் சறுகல்

ஐ. நா. தடைகளில் இருந்து குர்தீஷ்தான் பிராந்தியத்திற்கு விலக்களிப்பது ஈராக்கின் பிராந்திய ஒருமைப்பாட்டை மீறுவதாகிவிடும் என்ற புதிய தொனியில் இப்போது அமெரிக்கா பேசிவருகிறது. பாராளுமன்ற தேர்தல்களில் இருந்து குர்தீஷ்களை ஆர்வம் இழக்கச் செய்யவும் அமெரிக்கப்பிரஜைகளைஒதுங்கி இருக்கச்செய்யவும் இந்த 'ஒருமைப்பாட்டு' காரணத்தையே அமெரிக்கா முன்வைக்கிறது.

### துரதிர்ஷ்டம்

ஜனநாயக ரீதியிலான தன்னாட்சியில் குர்தீஷ் மக்கள் மேற்கொள்ளும் பரீட்சார்த்தத்தை மூறியடிக்கும் ஓர் முயற்சியாக குர்தீஷ் பகுதிகளை ஈராக் முற்றுகையிட்டுள்ளது. ஜனநாயகத்தில் குர்தீஷ் மேற்கொள்ளும் பரீட்சார்த்தம் அப்பகுதி மீதான தனது உரிமை பாராட்டலுக்கு ஒரு பெரும் பயமுறுத்தல் என ஈராக்கிலுள்ள பாத்கட்சி கருதுகிறது. குர்தீஷ்கள் ஈராக்கின் ஒரு பகுதி என்பதிலேயே அவர்களின் துரதிர்ஷ்டம் உள்ளது.

குவைத் போருக்கு பின்னர் நிறைவேற்றப்பட்ட ஐ நா பாதுகாப்புச்சபை தீர்மானங்களுக்கு ஈராக் ஜனாதிபதி சதாம் கட்டுப்பட வேண்டுமென ஐ நா விரும்புகிறது. எனவே சதாம் உடன் சேர்ந்து ஈராக்கிய குர்தீஷ்களையும் அது பொருளாதார தடைகளுக்குட்படுத்தியுள்ளது. பாதிக்கப்பட்டவர்களையும் அவர்களின் அடக்குமுறையாளர்களையும் இது ஒரே கூண்டில் வைக்கும் செயலாகும். சதாமின் கைகளில் வேறு எவரைக்காட்டிலும் மிகக்கூடுதலாக வதைபட்டமக்களுக்கு எதிராக தடைகள் எதற்கு? பல்லாயிரக்கணக்கான குர்தீஷ்கள் சதாமின் படைகளால் தமது 4000 நகரங்கள், கிராமங்கள் தரைமட்டமாக்கப்பட்டதை கண்டனர்.

### அமெரிக்காவின் ஆதரவு

ஈராக்கில் உள்ள குர்தீஷ்காரர்களும் ஏனையோரும் கிளர்ந்தெழ அன்றைய ஜனாதிபதி ஜோர்ஜ்புஷ்கோரிக்கை விடுத்ததையடுத்து 1991மார்ச்சில்சதாமின் சர்வாதிகாரத்திற்கு எதிராக குர்தீஷ்கள் கிளர்ந்தெழுந்தனர். அமெரிக்க ஜனாதிபதியின் உற்சாக மூட்டும் வார்த்தைகளைத் தொடர்ந்து தார்மீக ஆதரவுக்கும் கூடுதலாக வேறு எதுவும் பின்தொடரலாம் என அவர்கள் கருதினர். ஆனால் அது மிகப்பெரும் தவறாக இருந்தது. அவசர அவசரமாக அமைக்கப்பட்ட குர்தீஷ் கெரில்லா நிலைகளை ஊடறுத்து சதாமின் ஹெலிகப்டர்களும் டாங்கிகளும் பீரங்கிகளும் தகர்த்தெறிந்த போது அமெரிக்காவும் அதன் நேசநாட்டு படைகளும் கைகட்டி பார்த்து நின்றன. ஏறக்குறைய 20 லட்சம் குர்தீஷ் மக்கள் மலைகளுக்கும், துருக்கி, ஈரான் ஆகிய நாடுகளுக்கும் சிதறி ஓடினர்.

குர்தீஷ் மக்களின் வதைகள் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டமையும்பெருமளவு புதிய அகதிகளை பராமரிப்பதில் துருக்கி திணறியமையும் அமெரிக்காவை நிர்ப்பந்தத்திற்குள்ளாக்கியது. அமெரிக்கா, பிரான்ஸ், பிரிட்டன் என்பன வடக்கு ஈராக்கில் தலையிட சதாமின் படைகள்பின்வாங்கின. தமது எஞ்சியிருந்த வீடுகளுக்கு குர்தீஷ்கள் திரும்பினர்.

### குர்தீஷ்தான் அரசு அமைவு

ஈராக்கிய குர்தீஷ்கள் தன்னிச்சையான ஆட்சியில் போதியளவு தாக்குப்பிடித்து நின்றுள்ளனர். 1992 மேயில் அவர்கள் தேர்தல்களை நடத்தினர். இவர்கள் வரலாற்றில் முதற்தடவையாக நடந்த தேர்தலில் 105 ஆசனங்கள் கொண்ட பாராளுமன்றமும் இடைக்கால அரசும் உருவாகின.

ஜனநாயக தன்னாட்சி அரசாங்கத்தை பெற்றிருப்பதால் ஈராக்குடன் இணைய குர்தீஷ்கள் விரும்பமாட்டார்கள் எனினும் சதாமும் பாத் கட்சியும் ஆட்சியில் இல்லாமற் போனதும் சமஷ்டி ரீதியிலும் ஜனநாயக முறையிலும் அமைக்கப்படும் ஈராக்கில் சேர்ந்து கொள்ள தாம் தயார் என்பதை அவர்கள் தெளிவுபடுத்தியுள்ளனர். பிராந்திய தன்னாட்சியின் கீழ் குர்தீஷ்கள் தமது பொருளாதாரத்தையும் கலாசாரத்தையும் அபிவிருத்தி செய்யும் உரிமையை அது வழங்க வேண்டும்.

### அமெரிக்க தோல்வியின் காரணம்

'பிராந்தியத்தில் அமெரிக்காவின் கொள்கை ஏன் தோல்வியடைந்தது? அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள மத்தியதர அதிகார வர்க்கம் கடந்த காலத்திலேயேமூழ்கிப் போயிருப்பினும் குர்தீஷ்கள் தொடர்பிலான பாதகமான அரபு போக்கால் வசீகரிக்கப் பட்டிருப்பதே காரணமாகும்.

# மீண்டும் வெடித்துள்ள ஆப்கான் உள்நாட்டு போரினால் பேரழிவு

ஆப்கானிஸ்தானில் கடந்த மாதம் மீண்டும் வெடித்துள்ள யுத்தம், யெர்மனிலும், ருவாண்டாவிலும் இடம்பெறும் உள்நாட்டுப்போர், இனப்படுகொலை ஆகியன காரணமாக உலகின் கவனத்தை ஈர்க்கத் தவறிவிட்டது இதனால் ஆப்கான் மக்களுக்கு தேவையான சமாதான முயற்சிகளையும் நிவாரணத்தையும் பெற்றுக் கொடுக்க உதவும் பத்திரிகைப் பிரசாரங்கள் தடைப்பட்டுள்ளன.

அயல் நாடுகளின் துப்பாக்

வலகம் நிதிப் பற்றாக்குறை காரணமாக ஏற்கனவே இருந்துவரும் அகதிகளைக் கூட பராமரிக்க முடியாத நிலையில் உள்ளது சமாதான முயற்சிகளை மீண்டும் ஆரம்பிக்க நலிந்து போன முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

முன்னைநாள் டியூனீசிய வெளிநாட்டமைச்சரும் தற்போதைய ஐ நா. விசேஷ தூதுவருமான மெஹ்மூத் மேஸ்திரி இந்த மாதம் இஸ்லாமாபாத்துக்கும் காபூலுக்கும் சென்றிருந்தார்.

சிறிதுமுன்னரே தற்போதைய யுத்தம் ஆரம்பித்து விட்டது; பாகிஸ்தானின் முயற்சியின் பேரில் இஸ்லாமாபாத்தில் ரபானியும் ஹெக்மாட்டியாரும்கையெழுத்திட்ட உடன்படிக்கையின் படி ஜூன் 26 இல் ரபானியின் பதவிக்காலம் முடிவடைய இருந்தது.

கடந்த வாரம், காபூல் உயர் நீதிமன்றம் ரபானியின் பதவிக்காலத்தை 6 மாதங்களால் நீடித்ததுடன் ஹெக்மாட்டியாரின் பிரதம மந்திரி பத

தோர் ஆப்கான் விவகாரங்களில் முக்கிய இடத்தைப் பெற்று வருகின்றனர். ஆப்கான் யுத்தத்தில் தீர்வு காணும் முயற்சியில் ரஷ்ய மத்திய ஆசிய மத்தியஸ்தம் முக்கிய பங்கை வகிப்பதாக ஆப்கான் நிபுணர்கள் கூறுகிறார்கள் அண்டை நாட்டில் இஸ்லாமிய அச்சுறுத்தல் ஒன்றை மொஸ்கோ எதிர் நோக்கும்வரை அது தஜீக் அரசையே ஆதரிக்கும்.

உஸ்பெக்கிஸ்தான் பாகிஸ்தான். சவூதி அரேபியா

என பாகிஸ்தானும் ஈரானும் கூறுகின்றன. ஆனால் இந்தஜாத குழுவினர் ஜனாதிபதி குழுவினருடன் சேர்ந்து கொள்ளும்வரை ரபானி பதவியிலிருக்க வேண்டுமென சவூதி அரேபியா விரும்புகின்றது.

ஆனால் பிராந்திய சண்டையில் ஆப்கானிஸ்தானிலிருந்து வெளியேறும் அகதிகளுக்கு கதவடைப்புச் செய்த பின் பாகிஸ்தானின் செல்வாக்கு காபூலில் சரிந்துள்ளது. இந்த வருட முற்பகுதியில் காபூலிலுள்ள பாகிஸ்தான் தூதரகம் உடைக்கப்பட்டு தீவைத்துக் கொளுத்தப்பட்டது.

தஜீக், ஆப்கான் யுத்தங்களுக்குத் தீர்வின்றி மத்திய ஆசியாவுக்கு ஒரு போக்குவரத்து மையமாக இருப்பதில்,

பிரச்சினை விவகாரத்தில் ஐ. தே. க. அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் இருந்து வேறு வகையான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது. வடக்கு - கிழக்கில் இடம் பெறுவது இனப்பிரச்சினை தான் என்பதை ஏற்றுக் கொண்டுள்ள அரசாங்கம் இதனைத் தீர்ப்பதற்கு முயல்வதாகக் கூறி அதற்கென சிறியளவிலான நடவடிக்கைகள் சிலவற்றையும் எடுத்துள்ளது.

இவ்வாறாக இருந்தும், யாழ். குடாநாட்டிற்கான பாதை திறப்பதில் முன்னைய அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் இருந்து இவர்களால் மாற முடியவில்லை என்பது, இராணுவத்தின் நிலைப்பாட்டை அவர்களால் மாற்ற முடியவில்லை என்பதன் வெளிப்பாடே ஆகும். அதாவது ஆனையிறவுப் பாதையைத் தவிர வேறொரு பாதையைத் திறப்பதற்கு இராணுவம் தயாராக இல்லை என்பதே ஆகும்.

இதேசமயம் இராணுவத்தரப்பு இவ்விடயத்தில் மட்டுமல்ல, இனப்பிரச்சினை விடயத்தில் தன்னுடன் சம்பந்தப்பட்ட எந்த விடயத்திலும் விட்டுக்கொடுப்பிற்காக தயாராக இருப்பதாகவே தெரியவில்லை. இனப்பிரச்சினைக்கு அரசியற்தீர்வு காணப்படுவதற்கு இராணுவம் ஒத்துழைக்கும் எனக் கூறிக் கொள்கின்ற போதும், இராணுவம் சமாதானத்திற்கான விட்டுக் கொடுப்பு எதற்கும் தயாராக இல்லை என்பதே யதார்த்தமாகவுள்ளது.

எடுத்துக்காட்டாக இராணுவம் இனப்பிரச்சினைக்கு அரசியற்தீர்வு காண்பதற்கு அவசியம் எனக் கருதப்படும் யுத்த நிறுத்தம் ஒன்றைச் செய்வதற்குத் தயாராக இல்லை என்பது வெளிப்படை. பொது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் இதனை மறைக்க முயன்றாலும் இனப்பிரச்சினையில் அரசாங்கத்தின் முயற்சிகளில் பெரும் முன்னேற்றம் காணப்படாமைக்கோ அன்றி அரசியற்தீர்வில் தமிழ்மக்கள் நம்பிக்கை வைப்பதற்கான நல்ல பெரும் சமிக்ஞைகள் காண்பிக்கப்படாமைக்கோ இதுவே காரணமாகும்.

இந்நிலையிலேயே அரசாங்கத்தரப்பு ஆனையிறவுப் பாதை திறப்பதற்குக் காரணம் தேடிப் புதிய விளக்கம் ஒன்று கொடுக்க முற்படுகின்றது. ஆனால் ஆனையிறவுப் பாதை திறப்பது தொடர்பாக விடுதலைப்புலிகள் முன்னர் தெரிவித்த கருத்துக்களில் மாற்றம் ஏற்படக் கூடிய அளவிற்கு இராணுவச் சூழ்நிலையில் மாற்றம் எதுவும் ஏற்படவில்லை. ஆகையால் ஆனையிறவுப் பாதை திறப்பதற்கான வாய்ப்புக்கள் எவையும் உருவாகவில்லை என்றே கூறலாம். இந்நிலையில் ஆனையிறவுப் பாதை திறப்பதென்ற அரசாங்கத்தின் அறிவிப்பானது இராணுவம் தொடர்பாக அரசாங்கத்தின் கையாலாகாத்தனத்தைக் காட்டுகின்றது என்றே எண்ண வைக்கின்றது.

---

...ன.

அயல் நாடுகளின் துப்பாக்கிச்சண்டைகள் காரணமாக தளர்ச்சியடைந்த சர்வதேச சமரசப் பேச்சாளர்கள் அர்த்தமுள்ள பேச்சுக்கள் ஒழுங்கு செய்வதை கைவிட்டவர்களாகவே காணப்படுகிறார்கள் இதே வேளையில், ஆப்கானிஸ்தான் யுத்த பிரபுக்களின் கட்டுப்பாட்டிலுள்ள பிராந்தியங்களாக பிளவுபட்டு ஐக்கியத்தை இழந்துள்ளது

ஜூன் 25-இல் ஜனாதிபதி புர்ஹனுத்தீன் ரபானி பாதுகாப்பு அமைச்சர் அஹமத்ஷா மசௌத் ஆகியோரின் படைகள் விமானக்குண்டு வீச்சுகள் சகிதம் நடத்திய பாரிய இராணுவ நடவடிக்கையால் முன்னைநாள் கெரில்லாத் தலைவர் குல்புதின் ஹெக்மாட்டியாருக்குக்கீழ்ப்படிவான போராளிகள் பின்வாங்கினர். இப்போராளிகள் நிலைகொண்டு குண்டுத் தாக்குதல்கள் நடத்தும் மலையிலிருந்து பின்வாங்கிச்சென்றனர்.

இத் தாக்குதலையடுத்து காயமடைந்தவர்களை மீட்க முடியாத அளவுக்கு சண்டை உக்கிரமடைந்தது ஜனவரியில் படுகொலைகள் ஆரம்பமானதிலிருந்து போராளிகள் அல்லாதோர் 3000 க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர்

ஷெல் ஏவுகணைத்தாக்குதல்கள், ரொக்கட் தாக்குதல்கள் ஆகியனகாரணமாக காபூல்இடிபாடுகளாகக்காட்சியளிக்கிறது 500,000 பேர் நகரிலிருந்து தப்பிச்சென்று பாகிஸ்தான் எல்லைக்கருகிலுள்ள ஜலாலாபாத்தின் முகாம்களில் தஞ்சம் புகுந்துள்ளனர் இன்னமும் காபூலிலேயே தங்கி இருப்பவர்கள் தற்போதைய சண்டையிலிருந்து தப்பிக்கொள்ள முயற்சி செய்து வருகிறார்கள்,

## ஐ. நா கைவிரிப்பு

ஆப்கான் மக்களுக்கான மனிதாபிமான உதவிகளை மேற்கொள்ளும் ஐ நா. அலு...

...மேஸ்திரி இந்த மாதம் இஸ்லாமாபாத்துக்கும் காபூலுக்கும் சென்றிருந்தார்.

இஸ்லாமிய மகாநாட்டு ஸ்தானத்தின் தலைவர் ஹமிட் அல் காபித் இஸ்லாமாபாத்திற்குச் சென்ற பின்னர் காபூலில் பீரங்கித் தாக்குதலுக்கு மத்தியிலும் ரபானியை சந்தித்துப் பேசியுள்ளார்.

ஆனால் இவர்கள் இருவரில் எவருமே புதிய யோசனைகள் எதையும் கொண்டிருக்கவில்லை. எனினும் சிறு முன்னேற்ற அறிகுறி ஏற்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. இனவாதக் கருத்துக்களுடன் யுத்தம் புதிய திருப்பத்தை அடைந்துள்ளது என்றும் பிராந்திய ஆதிக்கங்கள் இதனைத் தூண்டி விடுகின்றன என்றும் இங்குள்ள ஆப்கான் அவதானிகள் கருதுகிறார்கள் அயலிலுள்ள தாஜிகிஸ்தானின் 2 வருட உள்நாட்டு யுத்தம் ஆப்கான் பிரச்சினையுடன் தொடர்புபட்டிருப்பதற்கான அறிகுறிகளும் கூடுதலாகக் காணப்படுகின்றன.

ஆப்கான் சமாதானப் பேச்சுக்கள் மத்திய ஆசிய நாடுகளான ஈரான், பாகிஸ்தான், சவூதிஅரேபியா ஆகிய நாடுகளையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் என்று தோன்றுவதாக சிரேஷ்ட பாகிஸ்தான் இராஜதந்திரி ஒருவர் கூறுகிறார்.

ஆப்கான் தஜீக் பிரச்சினைகள் ஒன்று சேரும் ஆபத்தை மனதில் கொண்டு மேஸ்திரி இஸ்லாமாபாத்துக்கு விஜயம் செய்த பின்னர் உஸ்பெகின் தலைநகர் டாஷ் கென்டுக்கு விஜயம் செய்தார். தஜீக் அரசாங்கத்துக்கும் கிளர்ச்சி வாதிகளுக்குமிடையியே கடந்த வாரம் தெஹ்ரானில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் யுத்த நிறுத்த உடன்படிக்கை ஒன்றை செய்து கொள்ளத் தவறி விட்டன.

## ஆறு மாதம் நீடிப்பு:

ரபானியின் 18மாத பதவிக் காலம் முடிவடைவதற்கு...

...நீடித்ததுடன் ஹெக்மாட்டியாரின் பிரதம மந்திரி பதவியை இல்லாமல் செய்தது.

தஜீக் இனத்தவர்களான ரபானி மசௌத் ஆகியோரின் கரம் தற்போது காபூலில் ஓங்கி உள்ளது இவர்களது தாக்குதலால் ஹெக் மாட்டியாரின் ரொக்கெட்டுகளுக்கு செலவு ஏற்படும். ஆனால் ஹெராத். கந்தகார் உட்பட ஏனைய ஆப்கான் பிராந்தியங்களில் போட்டி கூட்டுக்களிடையேயுத்தம் வெடித்துள்ளது.

ஹெக்மாட்டியார் முன்னைநாள் சோவியத் உஸ்பெக் ஆதரவாளரான தளபதி அப்துல் ரஷீத் டொஸ்டாமுடன் கூட்டு சேர்ந்துள்ளார். கடந்த வார நடவடிக்கையின் போது டொஸ்டாமின் படைகளே மிக மோசமாக தாக்கப்பட்டார்கள்.

டொஸ்டாம் தற்போது தமது கோட்டையான வட ஆப்கான் நகரான மஸார் - ஏ - சரீபில் தமது படைகளை பலப்படுத்திவருகிறார் உஸ்பெக் இனத்தவரான டொஸ்டாமுக்கு உஸ்பெகிஸ்தானிலிருந்து ஆதரவு கிடைப்பதாக நம்பப்படுகிறது. அரசாங்க நிலைகளுக்கு இவர் குண்டுவீச்சுத் தாக்குதலை நடத்த பயன்படும் சோவியத் தயாரிப்புகளான ஹெலிகொப்டர்களுக்கும் ஜெட் விமானங்களுக்கும் முக்கியமான உஸ்பெகிஸ்தானிலிருந்து உதிரிப் பாகங்கள் கிடைத்து வருகின்றன.

ரபானி, மசௌத், டொஸ்டாம் ஆகியோரைப் போலன்றி ஹெக்மாட்டியார் ஆப்கான்ஸ்தானின் தென்கிழக்கு பிராந்தியத்தைச் சேர்ந்த பஷ்டூன் மொழி பேசுபவர் ஆப்கான் -சோவியத் யுத்தத்தின் போது நாட்டிலிருந்து தப்பிச் சென்ற 50 லட்சம் ஆப்கான் மக்களில் பெரும்பான்மையானோர் பஷ்டூன் மொழிபேசுவோரே! சிலர் நாடு திரும்பி விட்டனர் ஆனால் தப்பி ஓடிய நிகழ்வு காரணமாக பஷ்டூன் அல்லா...

...உஸ்பெக்கிஸ்தான் பாகிஸ்தான். சவூதி அரேபியா போன்ற ஏனைய நாடுகளும் ஆப்கானிஸ்தானில் தமக்குப் பிடித்தமான பிரிவுகளை ஆதரித்து வருகின்றன. இந்த அரசுகளின் பாதுகாப்பும் ஆப்கான் பிரச்சினையுடன் தொடர்புடையதாக உள்ளது

## ரபானியின் பதவி?

ரபானிஜூன் 28 இல் பதவியைத் துறந்து விடவேண்டும்...

...சியாவுக்கு ஒரு போக்குவரத்து மையமாக இருப்பதில், பாகிஸ்தான் நன்மைகள் எதனையும் பெற்றுவிட முடியாது. ஆப்கானில், ஹெக்மாட்டியார் - டொஸ்டாம் கூட்டு காபூலைச்சுற்றிலும் கேந்திரஸ்தானத்தைப் பிடிக்க முடிவதால் சமரச முயற்சிகளில் உடனடி முன்னேற்றம் எதுவுமே காணப்படவில்லை.

(ஐ. பி. எஸ்)

---

# வடையுள் ஊசி ஊழியர் வாயில் காயம்

## பேராதனைசிற்றுண்டிச்சாலையில் சம்பவம்

(கொழும்பு)

வடை சாப்பிட்டவர் வாயில் இரத்தம் வடிவதைப் பார்த்தபோது வடைக்குள் ஊசி ஒன்று இருந்த சம்பவம் பேராதனை பல்கலைக்கழக சிற்றுண்டிச்சாலையில் நடைபெற்றது.

சம்பவதினம் பேராதனை பல்கலைக்கழகத்தில் கடமையாற்றும் ஊழியர் கோஷ்டி ஒன்று காலை 10 30 மணியளவில் அவசரமாக அங்குள்ளசிற்றுண்டிச்சாலைக்குள் சென்று அவசர அவசரமாக வடை சாப்பிட்டு தேநீர் பருகிய போது ஒருவர் வாயில் இரத்தம் வடிய ஐயோ ஐயோ என்று அதிர்ச்சியுடன் கதறினார். உடனே அங்கிருந்தவர்கள் இதனால் பீதியுற்று அந்நபரின் வாயை சோதித்தபோது அவர் வடை சாப்பிட்ட போது அதனுள் இருந்த சட்டை ஊசி அவரின் நாக்கில் குத்தி இரத்தம் வடிவதைக் கண்டு பிடித்தனர். பின்னர் சக ஊழியர் ஒருவர் அவரது வாயை கைகளால் பிடிக்க மற்றொரு ஊழியர் நாக்கில்குத்திக்கொண்டிருந்த அந்த ஊசியை அகற்றினார்

அண்மையில் கண்டியில் பாண் ஒன்றினுள் மனிதப் பல் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது தெரிந்ததே.

---

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

### 1994-09-13 செவ்வாய் இரவு

08.01 - ஊர் சுற்றும் ஒலி வாங்கி
08.10 - அறிந்து கொள்ளுங்கள் - தகவற்களஞ்சியம்
08.20 - நலந்தானா "சிறுநீர் தொகுதியில் ஏற்படும் நோய்களும் ஆலோசனைகளும்"
08.30 - செய்திகள்
08.40 - கருத்துக்களம்- "விடிவெள்ளி"
08.50 - களமும் கானமும்- "மலரும் முள்ளாகும்"

### 1994-09-14 புதன் காலை

07.02 - மாவீரவணக்கம்
07.15 - நீங்கள் கேட்டவை
07.30 - செய்திகள்
07.35 - பத்திரிகைச் செய்திகள்
07.40 - நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி,

## 2-ம் லெப். ராஜ்மோகன் நினைவுக்கல் நாட்டல்

கடந்த 6-ம் திகதி மன்னார் பள்ளிக்குடாப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட திடீர் மோதலில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட ஆறு போராளிகளில் 2-ம் லெப். ராஜ்மோகன் இராமமூர்த்தி போகரட்ணம், காரைநகர். தற்போதைய முகவரி புகையிரத வீதி, கோண்டாவில் மேற்கு) ஆகிய போராளியின் வித்துடல் மன்னார் மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட்டது.

மேற்படி மாவீரரின் உருவப்படம் அவரது தற்போதைய இல்லத்தில் இறுதி வீரவணக்கத்திற்கு வைக்கப்பட்டு இன்று பி.ப. 4.00 மணிக்கு நவாலி அட்டகிரி இடம்பெயர்ந்தோர் குடியிருப்பில் மக்களின் இறுதி வீரவணக்கத்திற்கு வைக்கப்பட்டு வீரவணக்கம் நிறைவுற இறுதி வீரவணக்கக் கூட்டத்தைத் தொடர்ந்து உருவப்படம் அணிவகுப்பு மரியாதையுடன் ஊர்தி பவனியாக கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம் எடுத்துச்செல்லப்பட்டு இறுதி இராணுவ மரியாதையுடன் நினைவுக்கல் நாட்டப்படும்.

## ஹபறண கப்பலுக்கு புறப்பட அனுமதி

(யாழ்ப்பாணம்)

கொழும்புத் துறைமுகத்தில் தடுத்து நிறுத்தப்பட்டிருந்த ''ஹபறண'' கப்பல் கொழும்புத் துறைமுகத்தில் இருந்து வடபகுதி நோக்கிப் புறப்பட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

யாழ். செயலகத்திற்கு நேற்று மாலை கிடைக்கப்பெற்ற வானொலிச் செய்தி ஒன்றின் மூலம் இது தெரிய வந்தது.

இக்கப்பல் கடந்த சில நாட்களிற்கு முன்னர் யாழ் மாவட்டத்திற்கான ஒரு தொகுதி உரத்துடன் கொழும்புத் துறைமுகத்தில் இருந்து புறப்பட ஆயத்தமாக இருந்த வேளை துறைமுகப்பகுதியில் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் இக்கப்பலின் பயணம் இடை நிறுத்தப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (பா) (சி)

## பாணுக்கு தட்டுப்பாடு; பணிஸ் உற்பத்தி அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்குடாநாட்டு பேக்கரிகளில் பணிஸ் உற்பத்தி அதிகரிக்கப்பட்டுள்ளது.

யாழ்குடா நாட்டில் பாண் விற்பனை நிலையங்களில் பாவனையாளர் போதியளவு பாணை பெற்றுக்கொள்ள முடியாது இருக்கும் அதே வேளை மேற்படி கடைகளில் பணிஸ் தாராளமாக பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருப்பதாக பாவனையாளர் தெரிவிக்கின்றனர்.

இது மாவின் விலைக் குறைவைத் தொடர்ந்து பாணின் விலையும் குறைக்கப்பட்டது ஆனால் பணிஸ் போன்ற பொருட்களின் விலைகள் குறைக்கப்படாது அதே விலையில் இருப்பதால் பேக்கரி உரிமையாளர் தமது இலாபத்தை உச்சப்படுத்தும் நோக்கில் பாணின் உற்பத்தியைக் குறைத்து பணிசின் உற்பத்தி அதிகரிக்கப்பட்டிருப்பதாலேயே மேற்படி தட்டுப்பாடு பாணிற்கு ஏற்பட்டுள்ளதாகமேலும் தெரிய வருகிறது. (88)(நி)

## தென் மாகாண சபைக்கு மகிந்தயாப்பா முதலமைச்சர்

(கொழும்பு)

தென்மாகாண சபையின் முதல்வராக மகிந்த யாப்பா அபயவர்த்தனா பெரும்பான்மை வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் தென்மாகாண சபைத் தலைவராக முன்பு கடமையாற்றியவர் என்பதும் தென் மாகாண சபையின் முன்னாள் முதல்வர் அமரசிறி தொடங்கொட அமைச்சராக பதவியேற்றிருப்பதும் தெரிந்ததே.

## தாக்குதல்கள் குறித்து

## வெள்ளைமாளிகை வளவினுள் வீழ்ந்து நொருங்கிய விமானம்

(வாஷிங்டன்)

அமெரிக்க அதிபரின் உத்தியோக பூர்வ இல்லமான வெள்ளை மாளிகையின் புல்வெளிப் பகுதியில் நேற்று சிறியரக விமானம் ஒன்று விழுந்து நொருங்கியுள்ளது. இச் சம்பவத்தில் விமான ஓட்டி உயிரிழந்தார். இச்சம்பவம் தற்செயல் நிகழ்வா அல்லது திட்டமிடப்பட்டதா என்பது குறித்து அதிகாரிகள் விசாரணைகள் மேற்கொண்டிருக்கின்றனர். இச்சம்பவம் நடைபெற்ற போது அமெரிக்க அதிபர் பில்கிளிண்டனும், அவரது குடும்பத்தினரும் பென்சில்வேனியாப் பகுதியில் தங்கியிருந்தது குறிப்பிடத்தக்கது. வெள்ளை மாளிகையின் சேதங்களைத் திருத்தும் பணிகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட்டன.

## அரசின் நடவடிக்கையால் முதலீட்டாளர்கள் குழப்பம்

(கொழும்பு)

அண்மைய பாராளுமன்றத் தேர்தலைத் தொடர்ந்து கொழும்பு பங்குச் சந்தை ஓரளவு சுமுக நிலையை அடைந்துள்ளது. எனினும் அரசின் கொள்கையைத்திட்டவட்டமாக அறிவிக்க வேண்டியதன் அவசியம் உள்ளது என சந்தை ஆய்வாளர்கள் கருத்து தெரிவித்துள்ளனர் வருட முடிவிற்குள் நடத்தப்படவுள்ள ஜனாதிபதி தேர்தல் தொடர்ந்தும் சந்தையில் பாதிப்பினை ஏற்படுத்தலாம் எனக் கூறப்படுகிறது

இது தொடர்பாக ஒரு தீர்மானத்திற்கு வருவதற்கு அரசு உடனடியாக அதன் கைத்தொழில், பொருளாதாரம், தனியார் மயப்படுத்தல், வரிக்கொள்கை, வெளிநாட்டு முதலீடு போன்றவை தொடர்பாக தனது கொள்கையைத் தெளிவுபடுத்த வேண்டும் என்று இவர்கள் கூறுகின்றனர். புதிய அரசு பதவி ஏற்றதும் தாம் சந்தைப் பொருளாதாரத்தை மாற்றப் போவதில்லை என்றும் திறந்த பொருளாதாரக்கொள்கை தொடர்ந்தும்கடைப்பிடிக்கப்படும் என்றும் உறுதியளித்த போதிலும் இடையில் அரசு மேற்கொண்ட சில நடவடிக்கைகள் முதலீட்டாளர்கள் மத்தியில் குழப்பத்தினை ஏற்படுத்தியுள்ளது.

அரசுக்குச் சொந்தமான உருக்கு ஆலை தனியார் மயப்படுத்தல் ரத்து, சுமார் 44,200 தொலைத்தொடர்பு தொலைபேசி பொருத்துவதற்கான அமெரிக்கஜப்பானிய ஒப்பந்தம் நிறுத்தம், பெற்றோலிய நிறுவனம் ஒன்று சோல்டெக்ஸ் நிறுவனத்திற்கு வழங்கப்படுதல் தொடர்பான பேரம் மீளாய்வு செய்யப்படுதல் போன்ற விடயங்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் முதலீட்டாளர் மத்தியில் குழப்பத்தினை ஏற்படுத்தியுள்ளது. எனினும் இவற்றுக்கெல்லாம் மத்தியில் இவைகளில் ஏதும் ஊழல் இடம் பெற்றனவா என்பதை அறிவதற்கான மீளாய்வுகள் மாத்திரமே என்றும் மீளாய்விற்குப் பின் முறையாக இத்திட்டங்கள் முனனெடுத்துச் செல்லப்படும் என அரசு உறுதியளித்துள்ளது.

## கடந்த ஒருவருடத்தில் மட்டும் கிழக்கில் 6000 பேரைக் காணவில்லை

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் கடந்த வருடத்தில் மட்டும் ஆறாயிரத்துக்கும் அதிகமான தமிழர்கள் காணாமற்போயிருப்பதாக சிறிலங்காவின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அவசரகால சட்டத்தின் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய அவர்மேலும் கூறுகையில் கொக்கட்டிச்சோலை பகுதியில் இடம்பெற்ற படுகொலை தொடர்பாக இருபது இராணுவத்தினர்மீது குற்றம் சாட்டப்பட்டது எனினும் ஒருவர்மீது மட்டுமே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வடக்கு-கிழக்கு பகுதியைச் சேர்ந்த 2000 க்கும் அதிகமானோர் சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவித்தார்.

### எறிகணை

...றியது. இதன்போது அவ் எறிகணையை பரீட்சித்த சிறுவனின் இரண்டு கைகளும் முகமும் படுகாயங்களுக்குள்ளா...

## புதியதொழிற்சங்க அமைக்க செல்லச்சாமி முடிவு

(கொழும்பு)

இலங்கை தொழிலாளர் காங்கிரசின்முன்னாள்பொதுச் செயலாளர் எம்.எஸ் செல்லச்சாமி தலைமையில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் (செல்லச்சாமி அணி) என்ற தொழிற்சங்கஅமைப்பொன்று விரைவில் ஆரம்பிக்கப்பட இருப்பதாக தெரியவருகின்றது.

இத்தொழிற் சங்கத்தை அடுத்த வாரம் இவர் பதிவு செய்யப்போவதாகவும் இதில் தொண்டமானின் நடவடிக்கையினால் பாதிப்படைந்த பலர் இணைந்து செயல்படபோவதாகவும் மேலும் தெரிய வருகின்றது.

## அரசியல்தீர்வு காண்பதற்கு கனேடிய அரசாங்கம் ஆதரவு

[கொழும்பு]

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண அரசாங்கம் எடுத்துவரும் முயற்சிகளுக்கு கனேடிய அரசாங்கம் ஆதரவு தெரிவித்துள்ளதாக சிறிலங்காவின் வெளியுறவு அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் தெரிவித்தார்.

கடந்தவார இறுதியில் கனேடிய தூதுவர் வெளியுறவு அமைச்சரைச் சந்தித்தபோது இவ்வாறு கூறியதாக மேலும் தெரியவருகிறது. சமாதானத் தீர்வு ஒன்றிலேயே இலங்கை மக்கள் அனைவரினதும் சுபீட்சம் தங்கியுள்ளது எனவும் கனேடிய தூதுவர் மேலும் கூறியதாக தெரிவிக்கப்படுகிறது.

## இந்திய வர்த்தக குழு கொழும்பு விஜயம்

### பிரதமரையும் சந்திக்கும்

(கொழும்பு)

இந்தியாவுடனான வர்த்தக உறவுகளை சிறிலங்கா அரசு மேலும் விஸ்தரிக்கவுள்ளது. இந்திய கைத்தொழில் சம்மேளனத்தைச் சேர்ந்த 7 பேர் கொண்ட உயர் மட்ட வர்த்தக தூதுக்குழு ஒன்று கொழும்பு வந்துள்ளது. இங்குள்ள வர்த்தக சம்மேளனம் விடுத்த அழைப்பின் பேரில் இங்கு வந்துள்ள வர்த்தக தூதுக்குழுவிற்கு இந்திய கைத்தொழில் சம்மேளனத்தின் முன்னாள் தலைவர் எம். ஸி சுப்பையா தலைமை வகிக்கிறார்.

இந்தியக் குழுவினர் இலங்கை வர்த்தக சங்கத்தினருடனும், அரச அதிகாரிகளுடனும் பேச்சுகளை ஆரம்பித்துள்ளனர், கூட்டு முயற்சி, முதலீடு என்பன தொடர்பாக இருதரப்பும் நடவடிக்கைகள் மேற்கொள்வர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கப்பல் போக்குவரத்து சுற்றுலா போன்ற விடயங்களும் ஆராயப்படவுள்ளது இருதரப்பு வர்த்தக நிலுவைகுறைப்பு குறித்தும் பேசப்படும்.

இந்தியக்குழுவினர் இன்று பிரதமரையும் சம்பந்தப்பட்ட அமைச்சர்களையும் சந்திப்பர்

### தடுப்பூசி

(கொழும்புத்துறை)

நாய்களுக்கு விசர்நோய் வராது தடுக்கும் முகமாக கொடிகாமம் உசன் சனசமூக நிலையம், வீனஸ் சனசமூக நிலையம்ஆகியவற்றில் இன்று காலை தடுப்பூசி போடப்படும். (24)

## கணனி குறித்த சொற்பொழிவு

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் ''பி''யின் கீழ் கலாநிதி ந அன்பழகன் என்பவரால் ''கணனித் தொழில் நுட்பத்தில் இன்றைய போக்கு'' என்னும் தலையங்கத்தில் நாளை புதன்கிழமை காலை 11மணிக்கு யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் பௌதிக விரிவுரை மண்டபத்தில் சொற்பொழிவு நடைபெறவுள்ளது.

### வீதியோர

மரநடுகைத் திட்டம், காடு வளர்ப்புத் திட்டம் என்பவற்றை நடைமுறைப்படுத்தி வருகின்றனர்.

இத் திட்டத்தின் கீழ் நடுகை மேற்கொள்ளப்பட்டு மரங்களைப் பாதுகாப்பதற்கென அமைக்கப்பட்ட கூடுகளை விறகுக்காகவும் வேறு தேவைக்காகவும் பிடுங்குதல், கூடுகளில் மிதிவண்டிகள் போன்றவற்றை சாத்துதல், அதில் கால்நடைகளைக்கட்டி மேயவிடுதல் போன்ற நடவடிக்கைகள் அவதானிக்கப்பட்டுள்ளன.

இந் நடவடிக்கைகள் மூலம் மரநடுகைத் திட்டங்கள் பெரும் பாதிப்படையும் நிலையுள்ளது.

எனவே எதிர்கால நன்மை கருதி வீதியோர மரங்களை சுற்றியுள்ள வேலிகளை பராமரிக்க ஒத்துழைப்புத்தருமாறு பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் பொது மக்க...

## சங்காபிஷேகம்

கொழும்புத்துறை மணலியம்பதி அருள்மிகு ஸ்ரீ அம்மன் ஐயனார்கோவில் மண்டலாபிஷேகம் பூர்த்தி நிகழ்வு 108 விசேட சங்காபிஷேகமும், பூசை வழிபாடும் இன்று காலை 10.00 மணி தொடக்கம் நடைபெறும்.

பூசை வழிபாட்டை அடுத்து நண்பகல் 12 30 மணிக்கு அன்னதானமும் இடம் பெறும்.

மாலை 4.00மணிக்கு அம்பாள்-ஐயனார் வீதிவலம் வந்து அடியார்களுக்கு திருவருள் பாலிக்கவுள்ளார்.

...மும் படுகாயங்களுக்குள்ளா னது. (சி)

வருகின்றது.

...பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் பொது மக்க ளிடம் கேட்டுள்ளனர்.

...வந்து அடியார்களுக்கு திரு வருள் பாலிக்கவுள்ளார். (24)

# தாக்குதல்கள் குறித்து ஆச்சரியப்பட போவதில்லை

## முன்னாள் விமானப்[illegible] கருத்து

(கொழும்பு)

விடுதலைப் புலிகளும், அர சாங்கமும், அமைதியான பேச்சுவார்த்தை நடத்த முய லும் இவ் வேளையில், இரு தரப்பாரும் தமது நிலைப் பாட்டை உறுதிசெய்யும் நட வடிக்கையில் இறங்கி இருப் பதாகவும், [illegible] அமை திப் பேச்சுவார்த்தையில் வன் முறைகள் ஏற்படலாம் என்று இருதரப்பும் அச்சம் கொண் டுள்ளதாகவும் கூறப்படுகி றது.

கடந்த சில வாரங்களாக நீடித்த மந்த நிலை நீக்கப் படும் வகையில் பூநகரி பகுதி யில் தாக்குதல் நடந்திருப்ப தாகவும், இன்னும் சில நாட் களில் இது போன்ற இரண் டொரு சம்பவங்கள் இடம் பெறுவது குறித்து தாம் ஆச்சரியப்படப் போவதில்லை எனவும் இலங்கை விமானப் படையின் முன்னாள் தளபதி ஹரி குணதிலக்க கூறியுள் ளார்.

## யாழ்

தார்.

இது தொடர்பாகஇம்மாத இறுதியில் நடைபெறும் சுகாதார அமைச்சின் கூட் டத்திற்குஇதனை சமர்ப்பிக்க இருப்பதாகவும் இது தொடர் பான வேலைகளை போதனா வைத்திய சாலைப் பணிப்பா ளர் வந்ததும் உடன் நட வடிக்கை எடுக்கப்போவதாக தெரிவித்தார். (88) (நி)

## செய்தியாளர்

வரத்தை நேரில் காணும் முக மாக வருகை தந்துள்ளனர்.

பி பி சி, ராய்ட்டர் மற்றும் கொழும்பு நாளிதழ்களின் செய்தியாளர்கள் கடந்த வாரம் யாழ். வந்திருந்தனர்.

ஜப்பான் தொலைக் காட்சி நிறுவனத்தைச் சேர்ந்த நான்கு செய்தியாளர்கள் இவ் வார இறுதிக்குள் யாழ் வர லாம் எனவும் தெரிய வரு கிறது.

## விண்ணப்பிக்கவும்

(யாழ்ப்பாணம்)

1994டிசம்பர் மாதம் நடை பெறவுள்ள ஆண்டு 9 கனிஷ்ட தொழில்நுட்பப் பரீட்சைக் கான விண்ணப்பப்படிவங் களைப் பூரணப்படுத்தி கோட் டங்களுக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப்பணிப்பாளரி டம் எதிர்வரும் 25-ம் திகதி க்கு முன்னர் ஒப்படைக்கும் படி வலயம் - 1 பாடசாலை அதிபர்களுக்கு கல்விப் பணிப் பளர் தெரிவித்துள்ளார்.

## சிறுபான்மை

மைப்பு சீர்திருத்தம் என்பது தனியே ஜனாதிபதி முறையை ஒழிப்பது மட்டுமன்றி பாரா ளுமன்ற ஆட்சி முறையிலும் சீர்திருத்தங்கள் தேவை என வும் இவை நடைமுறைக்குவர நீண்ட காலம் எடுக்கும் என வும் இவை தொடர்பாக சிறு பான்மை இனங்களுடன் முக் கியமாக கலந்துரையாடல்கள் நடத்தப்படும் எனவும் தெரி வித்தார்.

## பிரதிநிதிகளை

ராக இருப்பதாக நீங்கள் விடுத்த அறிக்கையை நாம் மிகவும் ஆர்வத்துடன் நோக்கினோம். இதுபற்றி நாம் விபரமாக உங்களுடன் பேச விரும்புகிறோம். எமது பிரதிநிதிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு நீங்களும் உங்க ளது பிரதிநிதிகளை நியமிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தடைகள் நீக்கப்பட்ட பொருட்கள் தாம தமின்றி யாழ்ப்பாண மக்களுக்கு கிடைக்க வேண்டும் என்பதையே நாம் விரும்புகின் றோம். பருத்தித்துறை ஊடாக மட்டும் இந்தப் பொருட்களை அனுப்பக்கூடியதாக இருப்பதால் எமக்குச் சிரமங்கள் உண்டு. எனவே யாழ்ப்பாண மக்களுககு பொருட் கள் தாமதமின்றி கிடைக்கக்கூடிய வழிவகை கள் பற்றி பரிசீலனை செய்ய விரும்புகின் றோம்.

பொதுமக்களது வாழ்வில் இயல்பு நிலையை ஏற்படுத்தும் வகையில்விரைவாக மின்சார விநி யோகத்தை மீளமைக்கவும், பெருஞ்சாலை களைத் திருத்தவும் நீர்ப்பாசனத் திட்டங் களை சீரமைக்கவும் எமது அரசாங்கம் முடிவு செய்துள்ளது,

வடக்கு - கிழக்கில் இயல்பு நிலை யைத் தோற்றுவிக்கவும் சமாதானத் தை உண்டுபண்ணவும் எமது அரசாங்கம் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு ஒத்துழைப் புத் தருவதாக நீங்கள் உறுதி அளித்திருப் பதை நாம் வரவேற்கிறோம்.

எனவே மேற்குறிப்பிட்ட அபிவிருத்தித் திட்டங்களின் சீரமைப்பு வேலைகளில் ஈடு படப்போகும் எமது தொழில்நுட்ப அதிகா ரிகளுக்கு சகல ஒத்துழைப்பையும் வழங்கு வீர்களென நாம் எதிர்பார்க்கிறோம்.

ஆரம்ப பேச்சுக்களை நடத்துவதற்காக நாம் நியமிக்கப்போகும் பிரதிநிதிகள் இவ்வி விடயம் சம்பந்தமான நடைமுறைப் பிரச்சி னைகள் குறித்தும் பேச்சுக்களை நடத்த லாம் என கருதுகிறோம்.

## புலிகளின்

நாம் நியமித்துள்ள பிரதிநிதிகளின் விபரம் வருமாறு:-

01. திரு. கே. கரிகாலன்,
துணைப் பொறுப்பாளர், அரசியற்றுறை.

02. திரு. சி. இளம்பரிதி,
அரசியற் பொறுப்பாளர்,
யாழ். மாவட்டம்.

03 திரு. ஆ. ரவி,
பொறுப்பாளர்,
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுநிறுவனம்.

04. திரு. ச. டொமினிக்,
பொறுப்பாளர்,
தமிழீழ நிர்வாக சேவை.

போர் நிறுத்தம் சம்பந்தமான எமது யோசனை பற்றி நீங்கள் உங்களது கடிதத்தில் எதுவுமே குறிப்பிடாததை யிட்டு நாம் வருந்துகிறோம். சமாதானம், நல்லெண்ணம், இயல்பு நிலையைத் தோற்றுவித்தல் போன்றவற்றை கட்டி யெழுப்பும் பணிக்கு போர் நிறுத்தமானது அத்தியாவசியம் என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். எனவே, இவ்விடயத் தில் நீங்கள் அவசரசிரத்தை கொள்வீர்களென நம்புகிறோம்.


யாழ். ஸ்ரீதரில்

தினசரி காலை 10.30, மாலை 6.00

WAY OF THE DRAGON

[கராட்டி]

16-09-1994 வெள்ளி முதல்

RAMBO III

(தாக்குதல் சித்திரம்)

தினசரி 10-30 4-00 6-00

தினசரி மாலை 4-00 மணிக்கு மட்டும்

CIRCUS

இதனுடன்

BIG BOSS படத்திலிருந்து புறூஸ்லீ யின் குங்ஃபூ சண்டைக் காட்சிகளும், RAMBO படத்திலிருந்து சில்வெஸ்டர் ஸ்டலோனின் சாகசக் காட்சிகளும் காண்பிக்கப்படும்.

ஃ பாடசாலையூடாக மாணவர்கள் தொடர்புகொண்டால் காட்சிநேர கட்டண சலுகைகள் வழங்கப்படும்.

(சி-10230)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி மீனாட்சி சுந்தரம்

வேலணை மேற்கைச் சேர்ந்த திருமதி மீனாட்சி சுந்தரம் சிவபதமடைந்துவிட்டார். இவர் காலஞ் சென்ற அம்பலவாணர் சுந்தரத்தின் அன்பு மனைவி யும், நீலாம்பிகை, ஞானசூரியன், ஞானாம்பாள் (பொற்கொடி, கனடா), கருணைநாயகி (பவளம்), தங்கவடிவேல், சண்முகவடிவேல், லோகநாதன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், கணேச பிள்ளை (சமிந்தா ஸ்ரோர்ஸ், கொழும்பு), மனோன் மணி, சாந்தலிங்கம், யோகலிங்கம் (இளைப்பாறிய, நில அளவைப் பகுதி உத்தியோகத்தர்), சரஸ்வதி, பன்னீர்ச்செல்வி, மனோகரி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல், யாழ்ப்பாணம் இல 8/2 பெருமாள் கோவில் மேற்கு வீதி, இல்லத்திலிருந்து, இன்று செவ்வாய் பிற்பகல் 2 மணியளவில் தகனக் கிரியைகளுக்காக, கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்;
யோகலிங்கம்
(மருமகன்)

(9392)

## திருமதி லெஷ்சுமண ஆச்சாரி முல்லையம்மாள்

வண்ணை சிவன்கோயிலடியைச் சேர்ந்த காலஞ் சென்ற லெஷ்சுமண ஆச்சாரியாரின் மனைவி முல்லை யம்மாள் 12-09-94 திங்கட்கிழமை காலை கால மாகிவிட்டார். இவர் பக்கீர்சாமி, வேணுகோபால், கெங்காதரன், ஜெகநாதன் அம்புஜம், கமலவள்ளி, இராஜேஸ்வரி, மகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயா ரும், காலஞ்சென்ற துரைச்சாமி, இராமையா, கந் தையா, கணபதிப்பிள்ளை, இராஜமணி ருக்குமணி, வசந்தா, தனலட்சுமி ஆகியோரின் அன்பு மாமியா ரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 13-09-94 செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பையன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறி வித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

306 காங்கேசன்துறை வீதி,
சிவன் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

தகவல்
லெ. கெங்காதரன் (மகன்)

[9386[


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ம் ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994-ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 13-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது